
உ
சிவமயம்





செந்தமிழ் கற்கும் சிறுவர்களின் ஊன்றுகோல்

# ஔவைமொழி



ஆக்கம் : இணுவையூர் கலாபூஷணம் மூ.சிவலிங்கம்

வெளியீடு : இணுவில் சைவத்திருநெறிக்கழகம்

சித்திரை, 2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# ஔவைமொழி

கலாபூஷணம் மூ.சிவலிங்கம்

வெளியீடு :

இணுவில் சைவத்திருநெறிக்கழகம்

சித்திரை, 2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் : ஔவைமொழி

தொகுப்பு : கலாபூஷணம் மூ.சிவலிங்கம்

வெளியீடு : இணுவில் சைவத்திருநெறிக்கழகம்

முதற்பதிப்பு : சித்திரை, 2017

நூல் வடிவமைப்பு : சுடர்நிலவு கிரபிக்ஸ், இணுவில்.

பக்கங்கள் : iv + 70

பிரதிகள் : 1000

விலை : 150/=



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

சிவமயம்

# முன்னுரை

இறைவனால் அருளப்பெற்ற செந்தமிழ் தொன்மை யானது. கடைச்சங்கத்தமிழ் பிற்காலத்தில் (இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்) நலிவடைந்தது. இறையருட் சித்தப்படி கல்விக்கரசியாம் சரஸ்வதியின் மறு அவதாரமாக இம் மண்ணில் ஔவை அவதரித்தார். ஓதாமல் கருவிலே அமைந்த கல்வியை உணர்ந்து சிறப்படைந்தார். இவர் விநாயகர், முருகனிடம் நேரில் உரையாடி அருள் பெற்றதுடன் சிறந்த தமிழ்ப் புலவரானார். அக்காலத்தில் பெண் புலவரானாலும் ஏனைய புலவர்களைப் புலமையால் வென்று ஆண்டி முதல் அரசர் வரை யாவராலும் போற்றப் பெற்றவர்.

தம்பணியில் இளம் சமுதாயத்தை ஊக்குவிக்கவென்றே இலகு தமிழில் அரிய கருத்துக்களைக் கொண்ட ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி, கல்வி ஒழுக்கம் போன்ற பல நூல்களுடன் பல தனிப்பாடல்களையும் பாடியுள்ளார். இன்றுவரை இப்பாடல் யாவராலும் விரும்பிக் கற்க முடிகிறது. தமிழ்மொழி இறையருளால் என்றும் வளம்மிக்கது. இன்றைய காலப்போக்கில் அந்நியர் கலை கலாசாரப் பண்பும், விஞ்ஞான உலகின் தொலைத் தொடர்பு சாதனங்கள் மற்றும் சினிமா மோகமும் மாணவர் சமூகத்தில் மனமாற்றத்தை ஏற்படுத்திய தால் தமிழறிவும் அதற்கான நூல்களும் அருகி வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலச்சூழலில் அன்று (2004இல்) என்னால் சமய இலக்கிய நூல்கள் எழுதுவதை நேரிற் கண்ட என் உடன் பிறவாச் சகோதரர் தமிழவேள் இ.க.கந்தசுவாமி அவர்கள் (கொழும்பு தமிழ்ச்சங்கம் வளர்த்தவர்) எமது அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்காக ஔவையார் பாடல்களைத் தொகுத்து நூலுருவில் வெளியிடுமாறு கோரினார். எனது அக்காலப்பணி தொடர்ந்ததால் 21 நூல்கள் எழுதி முடியும் வரை கால அவகாசம் கிடைக்கவில்லை. இன்றைய தேவை கருதி எனது முதுமையிலும் "ஔவைமொழி" என்னும் தலைப் பில் இம்மலரை இன்று வெளியிட்டு வைக்க இறையருள் பாலித்தது. எனது சமய இலக்கிய நூல்களை எழுத ஆர்வ மூட்டி ஆலோசனைகள் வழங்கிவரும் எமது செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் அவர்களுக்கு எனது உளமார்ந்த நன்றிகள். மேலும் இம்மலரைக் குறுகிய காலத்தில் சிறப்புற அமைத்துதவிய இணுவில் கிழக்கு சுடர்நிலவு பதிப்பகத்தினருக்கும் நன்றிகள்.

எனது முதுமைக் காலத்திலும் அறக் கல்வியில் ஆர்வ மூட்டி 22வது நூலான "ஔவைமொழி" என்னும் இந்தநூலை எழுத அன்றே உணர்த்திய அமரரான தமிழவேள் இ.க. கந்தசுவாமியின் நினைவாக எம்மை வளம்படுத்தி ஆட்டு விக்கும் எமது குல தெய்வமான இணுவில் சிவகாமி அம் மனுக்கு இம்மலரினைக் காணிக்கையாக்குவதில் மனநிறை வடைகிறேன்.

நன்றி.

**இணுவையூர் கலாபூஷணம் மூ. சிவலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


i. முன்னுரை

v. பொருளடக்கம்

1. ஔவைமொழி 01

   1. ஔவையின் அவதாரம் 02
   2. ஔவை மூதாட்டியானார் 03
   3. நாலுகோடி கவிகள் 05
   4. ஔவையாரும் முருகப்பெருமானும் 06
   5. கருத்தால் உயர்ந்த திருமணவாழ்த்து 08
   6. பொன்ஊஞ்சலின் சங்கிலிகள் நான்கும் அறப்பாடியது 09
   7. தனிப்பாடல்கள் 10
   8. விநாயகரும் ஔவையாரும் 13

2. விநாயகர் அகவல் 15

3. ஆத்திசூடி 18

4. கொன்றைவேந்தன் 29

5. மூதுரை 40

6. நல்வழி 50

7. கல்வி ஒழுக்கம் 62




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஔவைமொழி

"பாலும் தெளிதேனும் பாகும்பருப்பும் இவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத்தமிழ் மூன்றும் தா"

நாம் போற்றும் சைவமும் தமிழும் அநாதியானவை இறைவனே சைவத்தையும் தமிழையும் தமது சீடர்களுக்கு உபதேசித்தார். அச்சீடர்கள் தமக்கெனவோர் சீடர் பரம் பரையை ஏற்படுத்தினர். இறையருட் சித்தப்படி சைவமும் தமிழும் இன்று வரை பிரகாசிக்கின்றன. இறைவனால் விருத்தி செய்யப்பெற்றதால் தொன்மையும், செம்மையும் கொண்ட சிவநெறியும் தமிழ் மரபும் சிறப்பாகவே போற்றப்படுகின்றன.

காலத்திற்குக் காலம் தமிழகத்தில் புறச்சூழலால் இவை நலிவுற்றன. சைவமும் தமிழும் மேலும் வளர்ச்சி பெற இறைவன் அவ்வப்போது சிறப்பான பெரியார்களை அவதரிக்கச் செய்து உதவினார். சைவமும் தமிழும் இரண்டல்ல. ஒரே இணை வானவை. சைவம் வளரத் தமிழ் இன்றியமையாதது. இதன் பேறாகவே பல்லாயிரம் வருடங்களுக்கு முன் அகத்தியர், தொல்காப்பியர், திருமூலர் போன்ற பெரியார்களுக்குத் தமிழை உபதேசித்து அதனைத் தமிழகத்தில் போதிக்க வைத்தார். தமிழ்ச் சங்கங்களை அமைத்து ஓதி உணர வைத்த தால் சிறப்புடன் பிரகாசித்தது.

கடைச்சங்க காலமான இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் தமிழ் நலிவடைந்தது. இதைநோக்கிய இறைவன் கல்விக்கரசியாம் சரஸ்வதியிடம் தமிழை உய்விக்குமாறு அருளினார். சரஸ்வதி தமது அம்சமாகப் பூமியில் அவதரிக்கச் சித்தங்கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஔவையின் அவதாரம்

ஒரு சமயம் தீர்த்தயாத்திரை சென்ற பகவன் என்பவர் இடைத் தங்கலில் ஆதி என்பவரைக் காண நேர்ந்தது. ஆதியின் கட்டழகு இருவரையும் இணைய வைத்தது. இருவரும் தமக்குள்ளே புரிந்து கொண்ட வாக்குறுதிப்படி தமக்கெனப் பிறக்கும் குழந்தைகளை அவ்வவ்விடங்களிலேயே விட்டுச் செல்லவும் இணங்கினர்.

சோழநாட்டு உறையூரில் ஆதிபகவனின் முதற்பிள்ளை யாக அவதரித்தவர் ஔவையார். ஏற்கனவே பிள்ளையைப் பிறந்த இடத்தில் விட்டுச் செல்ல இணங்கிய போதும் முதற் பிள்ளையின் பாசத்தால் அதனை விட்டுச்செல்ல ஆதி தயங் கினாள். அச்சமயம் பிறந்தபோதே தெய்வீக உணர்வுடன் வந்த பிள்ளை தாயாரை வருந்தாது செல்லுமாறு பின்வரும் பாட லைப் பாடியது.

"இட்டமுடனென்றலையில் இன்னபடி என்றெழுதி
விட்ட சிவ னுஞ்செத்து விட்டானோ? - முட்டமுட்டப்
பஞ்சமே யானாலும் பாரமவ னுக்கன்னாய்
நெஞ்சமே அஞ்சாதே நீ"

என்று பாடினார்.

(அவ்விடம் விட்டகன்ற பெற்றோர் இதேபோல ஏழு பிள்ளைகளைப் பெற்று அனாதரவாக விட்டுச் சென்றனர். இப் பிள்ளைகளுள் மூத்தவரான ஔவையுடன் உப்பை, உறுவை, வள்ளி என நான்கு பெண் மகவுடன் அதியமான், கபிலர், திரு வள்ளுவர் என மூன்று சற்புத்தர்களுமாக எழுவரும் தலைசிறந்த தெய்வத் தமிழ்ப் புலவர்கள். இந்த ஏழு உடன் பிறவிகளில் மூத்தவரான ஔவையும் இளையவரான திருவள்ளுவரும் அதிசிறப்புடையவர்களென யாவரும் அறிவர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோர் விட்டுச் சென்ற ஔவையை அடுத்த தெருவில் வாழ்ந்த பிள்ளைகளில்லாத பாணன் ஒருவன் எடுத்துச் சென்று பரிவுடன் வளர்த்து வந்தான். தமிழ்ப்பணிக்கென்றே அவ தரித்து ஓதாமல் உணர்ந்த ஔவை தமது நாளாந்தப் பணியாக அயலிலுள்ள விநாயகரை உள்ளன்போடு வழிபட்டார். மங்கைப் பருவத்தில் தாம் கல்விப் பணிக்கெனச் செல்லும் போது இளமைப் பருவம் இடையூறாக இருந்ததை உணர்ந்தார்.

## ஔவை மூதாட்டியானார்

ஒரு நாள் விநாயகரை வணங்கும் போது தமது இளமைக் கோலம் மாறவேண்டுமென வேண்டினார். கட்டிளம் பெண் ணாகக் குனிந்து வணங்கியவர் எழும் போது மூதாட்டியின் கோலமாகக் காட்சி தந்தார். இறைவனின் பெருமையால் ஔவை தெய்வீகப் புலவராகப் பணி ஏற்றார்.

அக்காலத்தில் தெய்வத்தமிழில் புலவர்கள் பாடல்கள் பாடியதால் அற்புதங்கள் நிகழ்ந்தன. ஔவையார் தம் தமிழ்ப்பணியில் முதலில் சிறுவர்களுக்கான ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி, கல்வியொழுக்கம், விநாயகர் அகவல் போன்ற பல பாடல்களைப் பாடினார். மேலும் பல தனிப்பாடல்களையும் பாடியுள்ளார். இப்பாடல் களைப் பின்னர் அறிவோம்.

ஔவையாரின் தெய்வத்தமிழின் ஒலி மூவேந்தர்களான சேர, சோழ பாண்டிய மன்னர்களின் அரசமனைகளில் பொலிந்ததால் யாவரும் ஔவையார்மீது பெருமதிப்பளித்துப் பணிந்தனர். இவரின் ஆற்றல் தெய்வீகத் தன்மை வாய்ந்ததால் இவரின் புலமையை நன்று கற்றறிந்த புலவர்களே பெருமைப் படுத்தினர். கல்வியறிவு குன்றிய புலவர்களை ஔவையார் பெருஞ்சபைகளில் மூடர்களென தலை குனியச் செய்த ஆற்றல் மிக்கவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சமயம் நெடுந்தூரம் நடந்து சென்ற அசதியாகச் சிலம்பி என்னும் தாசியின் வீட்டுத் திண்ணையில் அமர்ந்தார். சிலம்பி தான் பருகவிருந்த கூழை ஔவைக்கு வழங்கினாள். அச்சமயம் ஔவையாரின் கண்ணில் தென்பட்ட பாடல் வரி இரண்டை நோக்கினார். கம்பர் ஒரு கவி பாட ஆயிரம் பொற்காசு வழங்குவது வழக்கம் சிலம்பி தன்னிடமிருந்த 500 பொற்காசு கொடுத்தாள். கம்பர் பாடிய இரு வரிகள்

"தண்ணீரும் காவிரியே தார் வேந்தன் சோழனே
மண்ணாவதும் சோழ மண்டலமே"

என மட்டும் பாடினார்.

சிலம்பியிடம் மிகுதிப்பணம் இல்லாமையால் பாடல் நிறைவு பெறவில்லை. ஔவையார் தமக்குத் கூழ் தந்த நன்றிக்காக மிகுதி இரு வரிகளையும் பாடினார். அவையாவன

"..........................................பெண்ணாவாள்
அம்பிற் சிலம்பி அரவிந்தத் தாளணியும்
செம்பொற் சிலம்பே சிலம்பு"

எனப் பாடிப் பாடலை நிறைவு செய்தார்.

இப்பாடல் மூலம் சிலம்பி பெரு நன்மையடைந்தாள்.

கம்பர் தான் பாடிய மிகுதிப் பாடலைப் பாடிய ஔவை மீது விரோத நிலையில் "அடீ" என்று சொல்ல விரும்பி "ஒரு காலடீ நாலிலைப் பந்தலடீ" எனச் சிலேடையாக பாடி அவமதித்தார். இதைக் கேட்ட ஔவையார் பதிலடியாகப் பாடலைப் பாடினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எட்டேகா லட்சணமே! எமனேறும் பரியே!
மட்டில் பெரியம்மை வாகனமே - முட்டமேல்
கூரையில்லா வீடே! குலராமன் தூதுவனே!
ஆரையடா சொன்னா யது"

*என்று பாடியதும் கம்பர் நாணமுற்றார்.*

## நாலு கோடி கவிகள்

ஒரு நாள் சோழமன்னனின் கட்டளைப்படி பொழுது விடியு முன் நாலுகோடி பாடல் பாடவேண்டியதால் துய ரடைந்த புலவர்களின் கவலைநீக்கவெனப் பாடிய நான்கு பாடல்கள்

"மதியாதார் முற்றம் மதித்தொருகால் சென்று
மிதியாமை கோடி பெறும்"

"உண்ணீருண் ணீரென் றுபசரியார் தம்மனையில்
உண்ணாமை கோடி பெறும்"

"கோடி கொடுத்தும் குடிப்பிறந்தார் தம்மோடு
கூடுதல் கோடி பெறும்"

"கோடானு கோடி கொடுப்பினும் தன்னுடை நாக்
கோடாமை கோடி பெறும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஔவையாரும் முருகப்பெருமானும்

ஒரு நாள் ஔவையார் காடுகளூடாக நெடுந்தூரம் சென்ற போது முருகப்பெருமான் மூதாட்டியின் தமிழ்ப் பாட்டைக் கேட்டின்புற எண்ணினார். எருமை மேய்க்கும் இடைச் சிறுவனாக நாவல் மரமொன்றில் ஏறியிருந்து நாவற்பழங் களைப் பறித்து உண்டுகொண்டிருந்தார். அச்சமயம் நடந்த களைப்பால் மரத்தடியில் இருந்த ஔவையார் சிறுவனை நோக்கி "அடா தம்பி ஆயாசமாக இருக்கிறது கொஞ்சம் நாவற்பழம் போடு" என்றார். அச்சிறுவன் "ஓ கிழவியே உனக்கு சுடுகிற பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா?" எனக் கேட்டான். இதைக்கேட்ட ஔவையார் சுடுகிற பழமும் இருக்கிறதா என வியந்து "சுடாத பழம் போடு" என்றார். சிறுவன் ஒரு மரக்கொப்பைக் கையால் உலுக்கியதும் நாவற் பழங்கள் மணலில் விழுந்தன. ஔவையார் நன்கு கனிந்த நாவற்பழங்களைப் பொறுக்கி எடுத்து ஒன்றை உண்ண ஆவலுற்றார். அப்பழத்தில் ஒட்டியிருந்த மணலை வாயால் ஊதினார். அச்சமயம் சிறுவன் "ஓ கிழவியே பழம் சுடுகிறதா? ஊதுகிறாய்" எனக் கேலி செய்தான். இடைச்சிறுவன் தம்மைக் கேலி செய்ததையும் தமது மதியீனத்தையும் உணர்ந்த ஔவையார் வெட்கமடைந்து பின்வரும் பாடலைப் பாடினார்.

"கருங்காலிக் கட்டைக்கு நாணாக் கோடாலி
இருங்கதலித் தண்டுக்கு நாணும்; - பெருங்கானில்
காரெருமை மேய்க்கின்ற காளைக்கு நான்றோத்த
தீரிரவு துஞ்சாதென் கண்"

எனப்பாடியதும் மரத்திலிருந்த சிறுவன் அக்கணமே ஔவையின் முன் முருகப்பெருமானாகக் காட்சி தந்தார். ஔவையார் பெருமானை வணங்கி நின்றார். முருகன் உலகில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவரும் ஔவையின் தமிழின்பத்தைச் சுவைப்பதன் பேரில் உலகத்தில் கொடியது, இனியது, பெரியது, அரியது ஆகிய வற்றைப் பாடுமாறு கேட்டார். பாடல்கள் இவையாகும்.

**கொடியது**

"கொடியது கேட்கி னெடிய வெவ்வேலோய்!
கொடிது கொடிது வறுமை கொடிது!
அதனினுங் கொடிது இளமையில் வறுமை!
அதினினுங் கொடிது ஆற்றொணாக் கொடுநோய்!
அதினினுங் கொடிது அன்பிலாப் பெண்டிர்
இன்புற வவர்கையி லுண்பது தானே!"

**இனியது**

இனியது கேட்கிற் றனிநெடு வேலோய்!
இனிய தினியது ஏகாந்த மினியது!
அதனினுமினிய ஆதியைத் தொழுதல்!
அதினினுமினியது அறிவினர்ச் சேர்தல்!
அதினினுமினியது அறிவுள்ளோரைக்
கனவிலு நனவிலுங் காண்பது தானே!

**பெரியது**

"பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய்!
பெரியது பெரியது புவனம் பெரியது!
புவனமோ நான்முகன் படைப்பு;
நான்முகன் கரியமா லுந்தியில் வந்தோன்;
கரியமாலோ அலைகடற் றுயின்றோன்;
அலைகடல் குறுமுனி யங்கையி லடக்கம்;
குறுமுனி யோகல சத்திற் பிறந்தோன்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலசமோ புவியிற் சிறு மண்;
புவியோ அரிவினுக் கொருதலைப் பாரம்;
அரவோ, உமையவள் சிறுவிரன் மோதிரம்;
உமையோ, இறைவர் பாதத் தொடுக்கம்;
இறைவரோ தொண்டருள்ளத் தொடுக்கம்;
தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே!"

## அரியது

"அரியது கேட்கின் வரிவடி வேலோய்!
அரிதரிது மானுட ராத லரிது!
மானுட ராயினும் கூன் குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்த லரிது!
பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமும் கல்வியும் நயத்த லரிது!
ஞானமும் கல்வியும் நயந்த காலையும்
தானமுந் தவமுந் தாஞ்செய லரிது!
தானமுந் தவமுந் தாஞ்செய்வா ராயின்
வானவர் நாடு வழி திறந் திடுமே!"

## கருத்தால் உயர்ந்த திருமண வாழ்த்து

ஒரு சமயம் சோழ மன்னனொருவனின் திருமணவிழாவில் ஔவையார் "வரப்புயர" என வாழ்த்தினார். இதனால் யாவரும் அதன் பொருள் விளங்காமற் திகைத்தனர். அச்சமயம் ஔவையார் அதன் விபரத்தை விபரமாகக் கூறினார். அனைவரும் வியந்தனர். அதன் விபரம் பின்வருமாறு (ஒரு நெல் வயலில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வரப்புயர நீருயரும்
நீர் உயர நெல் உயரும்
நெல் உயரக் குடி உயரும்
குடி உயரக் கோல் உயரும்
கோல் உயரக் கோன் உயர்வான்"

## பொன் ஊஞ்சலின் சங்கிலிகள் நான்கும் அறப்பாடியது

ஒரு சமயம் பாண்டிய மன்னனொருவன் புலவர்களின் தமிழ் ஆற்றலை அறிவதன் பேரில் ஒரு பொன் ஊஞ்சல் கட்டி அதன் நான்கு சங்கிலிகளின் மீது பொற் குவியலைக் கட்டி வைத்தான். அந்த நான்கு சங்கிலிகளும் அறுந்து விழ யார் பாடுகிறார்களோ அவர்களே பொற் குவியல் பரிசிற்குரியவர் என அறிவித்தான். அநேக பெரும் புலவர்கள் அங்கு வந்து தம்மால் இயலாதெனக் கூறி ஒதுங்கி விட்டனர். அவ்வழியே வந்த ஔவையார் அதனைப் பார்த்ததும் நான்கு பாடல்கள் பாடினார். நான்கு சங்கிலிகளும் அறுந்து ஊஞ்சலுடன் வீழ்ந்தன. மன்னன் மகிழ்வுடன் ஔவையின் புலமையை மெச்சினான். நான்கு பாடல்களும் இதுவாகும்.

"ஆர்த்த சபை நூற்றொருவ ராயிரத் தொன் றாம் புலவர்
வார்த்தை பதினா யிரத் தொருவர் - பூத்த மலர்த்
தண்டா மரைத்திருவே; தாதா கோ டிக்கொருவர்
உண்டாயி னுண்டென் றறு"

"தண்டாம லீவது தாளாண்மை; தண்டி
அடுத்தக்கா லீவது வண்மை; - அடுத்தடுத்துப்
பின் சென்றாலீவது காற்கூலி; பின் சென்றும்
ஈயாயெனச் சம்போ லறு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உள்ள வழக்கிருக்க வூரார் பொதுவிருக்கத்
தள்ளி வழக்கதனைத் தான்பேசி - எள்ளளவும்
கைக்கூலி தான் வாங்கும் காலறுவான் றன்கிளையும்
எச்சமறு மென்றா லறு"

"வழக்குடையா னிற்ப; வலியானைக் கூடி
வழக்கை யழி வழக்குச் செய்தோன் - வழக்கிழந்தோன்
சுற்றமும் தானுந் தொடர்ந்தழுத கண்ணீரால்
எச்சமறு மென்றா லறு"

## தனிப்பாடல்கள்

### பிறருக்கு ஈயாதவனைப் பாடியது

"சுற்றுங் கருங்குளவி சூரத்து ராரியப் பேய்
எற்றுஞ் சுடு காடிடி கரையின் புற்றில்
வளர்ந்த மடற்பனைக்குள் வைத்ததே னொக்கும்
தளர்ந்தோர்க்கொன் றீயார் தனம்"

### தனிப்பாடல்கள்

"இலக்கணக் கவிஞர் சொலின்பந் தேடுவர்;
மலக்குசொற் தேடுவர் வன்க ணாளர்கள்
நிலத்துறுங் கமலத்தை நீவும் வண்டது
தலைக்குறை கமலத்தைச் சாரும் தன்மைபோல்"

"கல்வியுடையீர்! கருங்கா னகத்திடையே
நெல்லி யிலையுதிர்ந்து நிற்பதெவன்? - வல்லாய்! கேள்;
வெல்லா வழக்கை விலை வாங்கி வெல்விக்கும்
வல்லாளன் சுற்றம் போல் மாண்டு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மாடில்லான் வாழ்வு மதியில்லான் வாணிப நன்
னாடில்லான் செங்கோ னடாத்துவது - கூடுங்
குருவில்லா வித்தை குணமில்லாப் பெண்டு
விருந்தில்லா வீடு விழல்"

"நிட்டுர மாக நிதிதேடு மன்னனும்
இட்டதனை மெச்சா விரப்போனும் - முட்டவே
கூசி நிலை நில்லாக் குலக்கொடியுங் கூசிய
வேசியும் கெட்டு விடும்"

"நேசனைக்கா ணாவிடத்து நெஞ்சார வேதுதித்தல்;
ஆசானை எவ்விடத்து மப்படியே - வாச
மனையாளைப் பஞ்சணையில்; மைந்தர்தமை நெஞ்சில்
வினையாளை வேலை முடி வில்"

**தனிப்பாடல்கள்**

"வான்குருவி யின்கூடு வல்லரக்குத் தொல்கறையான்
தேன் சிலம்பி யாவர்க்குஞ் செய்யரிதால் - யாம் பெரிதும்
வல்லோமே! என்று வலிமை சொல வேண்டாங்காண்!
எல்லோர்க்கு மொவ்வென் றெளிது"

"சித்திரமும் கைப்பழக்கம்; செந்தமிழும் நாப்பழக்கம்;
வைத்தவொரு கல்வி மனப் பழக்கம்; - நித்தம்
நடையும் நடைப்பழக்கம்; நட்பும் தயையும்
கொடையும் பிறவிக் குணம்"

"நம்ப னடியார்க்கு நல்காத் திரவியங்கள்
பம்புக்காம்; பேய்க்காம்; பரத்தையர்க்காம் - வம்புக்காம்,
கொள்ளைக்காம்; கள்ளுக்காம்; கோவுக்காம்; சாவுக்காம்
கள்வர்க்காம்; தீக்காகும் காண்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஐயம் இடுமின் அறநெறியைக் கைப்பிடிமின்
இவ்வளவே னும்அன்னம் இட்டுண்மின் - தெய்வம்
ஒருவனே யென்று முணரவல் லீரேல்
அருவினைக ளைந்து மறும்"

**திருக்குறளின் சிறப்பை வியந்து பாடியது**

"ஈதலறம்; தீவினை விட் டீட்டல் பொருள்; எஞ்ஞான்றும்
காதலிருவர் கருத்தொருமித் - தாதரவு
பட்டதே யின்பம்; பரனை நினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு"

**திருக்குறளை வியந்து பாடியது**

"அணுவைத் தொளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்"

**உலகத்தோரை நோக்கி அவர்களின் குண இயல்பைப் பாடியவை**

"சொல்லாமலே பெரியர்; சொல்லிச்செய்வர் சிறியர்;
சொல்லியுஞ் செய்யார் கயவரே - நல்ல
குலாமாலை வேற் கண்ணாய் கூறுவமை நாடிற்
பலாமாவைப் பாதிரியைப் பார்"

*புலவன் கையினுள் மண்ணை வைத்துக் கொண்டு இஃதென்ன? என்ற போது பாடியது,*

"கற்றது கைம் மண்ணளவு கல்லா துலகளவென்
றுற்ற கலைமடந்தை யோதுகிறாள்; மெத்த
வெறும்பந்தயங்கூற வேண்டா; புலவீர்!
எறும்புந்தன் கையாலெண் சாண்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆலைப் பலாவாக்கலாமோ? அருஞ் சுணங்கன்
வாலை நிமிர்த்த வசமாமோ? - நீலநிறக்
காக்கைதனைப் பேசுகிக்கலாமோ? கருணையிலா
மூர்க்கனைச் சீராக்கலாமோ?

"தாயோ டறுசுவைபோம்; தந்தையோடு கல்விபோம்;
சேயோடு தான்பெற்ற செல்வம்போம்; - ஆயவாழ்
வுற்றா ருடன் போம்; உடற்பிறப்பாற் றோள் வலிபோம்;
பொற்றாலி யோடெவையும் போம்"

"போந்த வுதாரனுக்குப் பொன்றுரும்பு; சூரனுக்குச்
சேர்ந்த மரணஞ் சிறுதுரும்பாம்; - ஆர்ந்த
அறிவோர்க்கு நாரி யருந்துரும்பாம்; இல்லத்
துறவோற்கு வேந்தன் துரும்பு"

"செம்மான் கரத்தனருள் சேயா! நெடியோனை
அம்மானெனப் பெற்றருள்வேலா! - இம்மான்
கரும்பிறைக்கும் வெண் பிறைக்கும் கண்ணம் பிறைக்கும்
அரும்பிறைக்கும் கூந்த லணை!

## விநாயகரும் ஔவையாரும்

ஒரு நாள் ஔவையார் விநாயகருக்கான நாளாந்தப் பூசையை விரைவாகச் செய்தார். அச்சமயம் விநாயகர் "வழக்கப் படியல்லாது ஏன் விரைவாகச் செய்கிறாய்" என்று கேட்டதும் ஔவை "சுந்தரரும், சேரமானும் கைலாயஞ் செல்லும் போது என்னையும் உடன் வர அழைத்தனர்" என்றார். விநாயகர் "முறைப்படி பூசை செய்ததும் அவர்களுக்கு முன் கைலையிற் சேர்க்கலாம்" என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமானின் கூற்றிற்கிணங்க ஔவை "சீதக்களப" என்று தொடங்கும் அகவல் பாடிய வண்ணம் பூசித்தார். உளம் நெகிழ்ந்த விநாயகர் விஸ்வரூபமெடுத்துத் தமது துதிக்கையால் ஔவையைக் கைலையிற் சேர்த்தார். சற்று நேரஞ் செல்ல வந்த சுந்தரரும் சேரமானும் ஔவையின் பக்தியையும் விநாயகரின் அற்புதத்தையும் கண்டு வியந்தனர்.

அச்சமயம் ஔவையார் தாம் வந்த வரலாற்றைக் கூறிய பாடல் இதுவாகும்.

"மதுர மொழி நல் லுமையாள் புதல்வன் மலர்ப்பதத்தை
முதிர நினையவல் லார்க்கரி தோமுகில் போன் முழங்கி
அதிர வருகின்ற யானையுந் தேருமதன் பின் சென்ற
குதிரையுங் காதங் கிழவியுங் காதல் குல மன்னனே!"

**சிவதோத்திரம்**

"மேற்பார்க்க மைந்தரும் மூவாவெருதும் விளங்கு கங்கை
நீர் பாய்ச்சலு நன் நிலமுண்டாகியு நின்னிடத்திற்
பாற்பாக் கியவதி நீங்கா திருந்தும் பலிக்குழன்றாய்
ஏற்பார்க் கிடாமலன் றோபெருங்கோயிலிறைவனே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஔவையார் பாடிய

# விநாயகர் அகவல்



சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன் அரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடி கொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே!
முப்பழ நுகரும் மூஷிக வாகன!
இப்பொழு தென்னை ஆட்கொள்ள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து
குருவடிவாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திரமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டி யென்செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் றன்னை யடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை யறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்கிசை நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடை பிங்கலையின் எழுத்த றிவித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமும் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத் தறிவித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற் சக்கரத்தின் உறுப்பையுங் காட்டி
சண்முகதூலமும் சதுர்முக சூக்கமும்
எண்முகம் ஆக இனிதெனக் கருளி
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசெனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி யிரண்டுங் கொன்றிட மென்ன
அருள் தரும் ஆனந்தத் தழுத்தியென் செவியில்
எல்லை யில்லா ஆனந்தம் அளித்
தல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டி
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவுக் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறிவித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக! விநாயக! விரைகழல் சரணே!

முற்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்திசூடி

## கடவுள் வாழ்த்து

**ஆத்திசூடி அமர்ந்த தேவனை**
**ஏத்தி ஏத்தி தொழுவோம் யாமே**

ஆத்திப் பூமாலையை அணிந்துள்ள சிவபெருமானின் பிரியத்துக்குரிய விநாயகப் பெருமானை எப்பொழுதும் வழிபட்டு நாம் வணங்குவோம்.

## நூல்

**அறஞ்செய விரும்பு** 1

நற்காரியங்களைச் செய்வதற்கு ஆசைப்பட வேண்டும்.

**ஆறுவது சினம்** 2

கோபத்தைத் தணியச் செய்ய வேண்டும்.

**இயல்வது கரவேல்** 3

இயன்றதை ஒளிக்காமல் செய்ய வேண்டும்.

**ஈவது விலக்கேல்** 4

பிறருக்கு உதவி செய்வதைத் தடுக்கக்கூடாது.

**உடையது விளம்பேல்** 5

உன்னிடம் இருக்கும் நன்மை தீமைகளைப் பிறரிடம் கூறாதே.

**ஊக்கமது கைவிடேல்** 6

தைரியத்தைக் கைவிடக்கூடாது.

**எண் எழுத்து இகழேல்** 7

கணிதம், இலக்கியம் இவற்றை இகழ்ந்து ஒதுக்கக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஏற்பது இகழ்ச்சி** 8

பிறரிடம் போய் யாசிப்பது இழிவாகும்.

**ஐயம் இட்டு உண்** 9

பிச்சை கேட்பவர்க்கு உணவு கொடுத்த பின்னர் சாப்பிட வேண்டும்.

**ஒப்புரவு ஒழுகு** 10

உலக அனுபவத்தை அறிந்து அதற்கேற்ப நடந்துகொள்.

**ஓதுவது ஒழியேல்** 11

படிப்பதை விட்டுவிடக்கூடாது.

**ஔவியம் பேசேல்** 12

பொறாமைக் குணத்தோடு சொல்லக்கூடாது.

**அஃகஞ் சுருக்கேல்** 13

தானியங்களை எடை அளவு குறைத்து நிறுக்கக்கூடாது.

**கண்டு ஒன்று சொல்லேல்** 14

கண்ணால் பார்த்ததைத் தவிர வேறு எதையும் கூறாதே.

**ஙப் போல் வளை** 15

"ங" என்ற எழுத்தைப் போல் அனைவருடனும் இணைந்து செல்ல வேண்டும்.

**சனி நீராடு** 16

சனிக்கிழமை தோறும் எண்ணெய் தேய்த்துக் குளிப்பாயாக.

**ஞயம்பட உரை** 17

கனிவான முறையில் எதையும் கூறுவாயாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடம் பட வீடு எடேல் 18

தேவைக்கு அதிகமாக வீட்டைப் பெரிதாக அமைக்காதே.

## இணக்கம் அறிந்து இணங்கு 19

நட்பு கொள்ளமுன் அவர் நல்லவரா என்பதை தீர அறிந்து அதன் பிறகு தொடர்பு கொள்ள வேண்டும்.

## தந்தை தாய் பேண் 20

பெற்றோரைப் போற்றி ஆதரிக்க வேண்டும்.

## நன்றி மறவேல் 21

ஒருவர் செய்த உதவியை மறந்துவிடக் கூடாது.

## பருவத்தே பயிர் செய் 22

உரிய காலத்திலே உழுது பயிரிட முற்பட வேண்டும்.

## மண் பறித்து உண்ணேல் 23

மற்றவருடைய நிலத்தை அபகரித்து அதை உண்டு வாழக்கூடாது.

## இயல்பு அலாதன செயேல் 24

வழக்கத்துக்கு மாறான காரியத்தை செய்யக் கூடாது.

## அரவம் ஆடேல் 25

பாம்போடு விளையாடினால் ஆபத்து நேரிடும்.

## இலவம் பஞ்சில் துயில் 26

இலவம் பஞ்சு மெத்தையில் படுத்து நித்திரை செய்வது நன்மை தரும்.

## வஞ்சகம் பேசேல் 27

கபடமாகப் பேசக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அழகு அலாதன செயேல் 28

பிறர் இகழத்தக்கவற்றை செய்யக் கூடாது.

### இளமையில் கல் 29

சிறு பிராயத்திலே கல்வியைக் கற்பது சிறப்பாகும்.

### அரனை மறவேல் 30

இறைவனை மறவாமல் துதித்து வணங்க வேண்டும்.

### அனந்தல் ஆடேல் 31

கடலில் நீந்தி விளையாடினால் ஆபத்து நேரிடும்.

### கடிவது மற 32

பிறருக்கு கோபம் உண்டாக்கக்கூடிய சொற்களைக் கூறக்கூடாது.

### காப்பது விரதம் 33

பிற உயிர்களுக்கு ஆபத்து நேரிடாமல் காப்பது நோன்பு ஆகும்.

### கிழமைப் பட வாழ் 34

தனக்கே அன்றி மற்றவர்களுக்கும் உதவியாக வாழவேண்டும்.

### கீழ்மை அகற்று 35

கீழ்த்தரமான செயல்களை செய்யாமல் நீக்கிவிட வேண்டும்.

### குணமது கைவிடேல் 36

நற்பண்புகளைக் கைவிடாமல் வாழ வேண்டும்.

### கூடிப் பிரியேல் 37

நல்லவருடன் சிநேகம் செய்த, பிறகு அவரை விட்டு நீங்குதல் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கெடுப்பது ஒழி** 38

ஒருவருக்கு தீங்கு செய்யக் கூடாது.

**கேள்வி முயல்** 39

அறிவாளிகள் சொற்களை ஆவலோடு கேட்டுத் தெரிந்து கொள்.

**கைவினை கரவேல்** 40

கற்ற கைத்தொழில்களை மற்றவருக்கும் கற்றுக்கொடு

**கொள்ளை விரும்பேல்** 41

ஒருவருடைய பொருளை கொள்ளை அடிக்க ஆசைப்படாதே.

**கோதாட்டு ஒழி** 42

ஆபத்தை உண்டாக்கக்கூடிய விளையாட்டுகளில் ஈடுபடாதே.

**சக்கரநெறி நில்** 43

அரசு ஆணைகளை மதித்து நடக்க வேண்டும்.

**சான்றோர் இனத்திரு** 44

அறிஞர்களின் குழுவிலே சேர்ந்து இருப்பது மேன்மை அளிக்கும்.

**சித்திரம் பேசேல்** 45

பொய்யை அலங்காரமாக உண்மைபோலப் பேசக்கூடாது.

**சீர்மை மறவேல்** 46

சிறப்பான செயல்களை மறந்துவிட வேண்டாம்.

**சுளிக்கச் சொல்லேல்** 47

மற்றவர் முகம் கோணும்படியான சொற்களைக் கூறக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சூது விரும்பேல்** 48

சூதாட்டங்களினால் பொருள் நஷ்டமும் மனக்கஷ்டமும் உண்டாகும்.

**செய்வன திருந்தச் செய்** 49

செய்யும் காரியங்களைச் செவ்வையாகச் செய்ய வேண்டும்.

**சேரிடம் அறிந்து சேர்** 50

சேரத்தக்கவர்களை நன்கு அறிந்து சேர வேண்டும்.

**சை எனத் திரியேல்** 51

மற்றவர் இகழும்படி நடந்து கொள்ளக்கூடாது.

**சொல் சோர்வு படேல்** 52

மற்றவருடன் பேசும்போது மனம் தளர்ந்து பேசக்கூடாது.

**சோம்பித் திரியேல்** 53

முயற்சி இன்றி சோம்பேறித் தனமாக ஊர் சுற்றக் கூடாது.

**தக்கோன் எனத் திரி** 54

கௌரவமானவன் என பிறர் கருதும்படி நடக்க வேண்டும்.

**தானமது விரும்பு** 55

ஆதரவற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும்.

**திருமாலுக்கு அடிமை செய்** 56

மகாவிஷ்ணுவுக்கு சேவை செய்தால் புண்ணியம் கிடைக்கும்.

**தீவினை அகற்று** 57

பிறருக்குத் தீமை உண்டாக்கும் செயல்களைச் செய்யக் கூடாது.

**துன்பத்திற்கு இடம் கொடேல்** 58

மனம் வருந்தும்படி நடந்து கொள்ளக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தூக்கி வினைசெய் 59

எந்தக் காரியத்தையும் நன்கு ஆராய்ந்து தெளிந்து செய்ய வேண்டும்.

### தெய்வம் இகழேல் 60

கடவுளை இகழ்ச்சியாகப் பேசக்கூடாது.

### தேசத்தோடு ஒத்துவாழ் 61

தன் நாட்டு மக்களோடு ஒற்றுமையாக இணைந்து வாழ வேண்டும்.

### தையல் சொல் கேளேல் 62

மனைவியின் இழிந்த சொற்களைக் கேட்டு அதன்படி நடக்கக் கூடாது.

### தொன்மை மறவேல் 63

பழமையான காரியங்களை மறந்துவிடக் கூடாது.

### தோற்பன தொடரேல் 64

தோல்வி உண்டாகும் எனத் தெரிந்தும் அதில் ஈடுபடக்கூடாது.

### நன்மை கடைப்பிடி 65

நற்காரியங்களை உறுதியாகச் செய்துவர வேண்டும்.

### நாடு ஒப்பன செய் 66

நாட்டு மக்கள் ஒப்புக்கொள்ளத்தக்க காரியங்களைச் செய்ய வேண்டும்.

### நிலையில் பிரியேல் 67

மதிப்போடு இருந்துவிட்டு கேவலமாக நடந்து கொள்ளக்கூடாது.

### நீர் விளையாடேல் 68

ஆபத்தான வெள்ளத்தில் நீந்தி விளையாடக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நுண்மை நுகரேல்** 69

நோயைத் தரக்கூடிய ஆகாரங்களை உண்ணக்கூடாது.

**நூல் பல கல்** 70

அறிவு வளர்ச்சிக்கான நூல்களை அதிகமாகப் படிக்க வேண்டும்.

**நெல் பயிர் விளை** 71

நெல் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும்.

**நேர்பட ஒழுகு** 72

நேர்மையான வழியில் நடந்து கொள்ள வேண்டும்.

**நைவினை நுணுகேல்** 73

இகழ்ச்சியான காரியங்களைச் செய்யக் கூடாது.

**நொய்ய உரையேல்** 74

பிறர் மனம் புண்படும் படியான வார்த்தைகளைக் கூறவேண்டாம்.

**நோய்க்கு இடம்கொடேல்** 75

நோய் உடலில் அணுகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

**பழிப்பன பகரேல்** 76

பிறர் பழிக்கும் படியான இழிவான சொற்களைக் கூறவேண்டாம்.

**பாம்பொடு பழகேல்** 77

பாம்பொடு விளையாடுவது உயிருக்கு ஆபத்து.

**பிழைபடச் சொல்லேல்** 78

தவறான கருத்து ஏற்படும் சொற்களைச் சொல்ல வேண்டாம்.

**பீடு பெற நில்** 79

பெருமைப் படத்தக்க முறையில் நடந்து கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புகழ்ந்தாரைப் போற்றி வாழ் 80

புகழ்மிக்க பெரியவர்களை வணங்கி, அவர்களைப் பின்பற்றி வாழ வேண்டும்.

## பூமி திருத்தி உண் 81

நிலத்தைப் பயிர் செய்து, விளைந்த நெல்லைக் கொண்டு உண்ண வேண்டும்.

## பெரியாரைத் துணைக் கொள் 82

அறிவுமிகுந்த ஒழுக்கசீலர்களை அணுகி, அவர்களின் அறிவுரைகளைக் கேட்டு நடக்க வேண்டும்.

## பேதைமை அகற்று 83

மூடத்தனமாக நடந்துகொள்ளக் கூடாது.

## பையலோடு இணங்கேல் 84

அறிவற்ற சிறுவனோடு பழகக் கூடாது.

## பொருள்தனைப் போற்றி வாழ் 85

பொருள்களையும் செல்வத்தையும் கவனமாகப் பாதுகாத்து வைத்துக் கொண்டு வாழ வேண்டும்.

## போர்த் தொழில் புரியேல் 86

வீணான சண்டை சச்சரவுகளில் தலையிட வேண்டாம்.

## மனம் தடுமாறேல் 87

மனம் கலங்கி செய்வது அறியாது தடுமாற வேண்டாம்.

## மாற்றானுக்கு இடம் கொடேல் 88

எதிரிக்குச் சிறிதளவேனும் இடம் அளிக்கக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மிகைபடச் சொல்லேல்** **89**

அளவுக்கு மீறிய சொற்களைச் சொல்லக் கூடாது.

**மீதூண் விரும்பேல்** **90**

அளவுக்கு அதிகமான உணவை உண்ண வேண்டாம்.

**முனை முகத்து நில்லேல்** **91**

போர்முனையில் ஆயுதம் இல்லாது நிற்கக் கூடாது.

**மூர்க்கரோடு இணங்கேல்** **92**

அறிவு இல்லாத மூடர்களோடு சேரக்கூடாது.

**மெல்லி நல்லாள் தோள்சேர்** **93**

வீட்டிலே நல்ல மனைவியோடு இணைந்து வாழ வேண்டும்.

**மேன் மக்கள் சொல் கேள்** **94**

உயர் குணமிக்க பெரியோர்களின் அறிவுரையைக் கேட்டு நடந்தால் நன்மை உண்டாகும்.

**மை விழியார் மனை அகல்** **95**

மயக்கும் விலை மாதர் வீட்டிற்குப் போக வேண்டாம்.

**மொழிவது அறமொழி** **96**

சொல்லக்கூடியதை சந்தேகமின்றித் தெளிவாகக் கூற வேண்டும்.

**மோகத்தை முனி** **97**

ஆசையை வெறுத்து அடக்க வேண்டும்.

**வல்லமை பேசேல்** **98**

உன்னுடைய திறமையை நீயே புகழ்ந்து கொள்ளக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாது முற்கூறேல்** 99

வலியச் சென்று யாரையும் விவாதங்களுக்குக் கூப்பிடக்கூடாது.

**வித்தை விரும்பு** 100

கல்வி முதலான கலைகளை ஆசையோடு கற்றுக்கொள்ள வேண்டும்.

**வீடு பெற நில்** 101

முக்திக்கான வழியை அடைய முயற்சி செய்ய வேண்டும்.

**உத்தமனாய் இரு** 102

நற்குணம் உள்ளவனாக வாழ வேண்டும்.

**ஊருடன் கூடிவாழ்** 103

ஊர்மக்களோடு ஒற்றுமையாக இணைந்து வாழ வேண்டும்.

**வெட்டெனப் பேசேல்** 104

யாரிடமும் கடுமையான சொற்களைக் கூறக்கூடாது.

**வேண்டி வினை செயேல்** 105

வேண்டும் என்றே எவருக்கும் தீமை செய்யக்கூடாது.

**வைகறைத் துயில் எழு** 106

அதிகாலையில் விழித்து எழுவது சிறப்புடையதாகும்.

**ஒன்னாரைத் தேறேல்** 107

எதிரிகளிடம் நம்பிக்கை கொள்ளக்கூடாது.

**ஓரம் சொல்லேல்** 108

ஒருதலைப் பட்சமாகக் கூறக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொன்றை வேந்தன்

## கடவுள் வாழ்த்து

**கொன்றை வேந்தன் செல்வன் அடியினை**
**என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே**

கொன்றைப் பூவை அணிந்துள்ள சிவபெருமானுடைய செல்வப் புத்திரனான விநாயகப் பெருமானை எப்பொழுதும் துதித்துப் போற்றி வணங்குவோம்.

## நூல்

**அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்** **1**

அம்மாவும் அப்பாவும் கண்கண்ட கடவுள்

**ஆலயம் தொழுவது சாலவும் நன்று** **2**

கோவிலுக்குப் போய் இறைவனை வணங்குவது மிகவும் நன்மை தரும்.

**இல் அறம் அல்லது நல் அறம் அன்று** **3**

மனைவியோடு சேர்ந்து வாழ்வது நல்வாழ்வு: இல்லாவிடில் நல்வாழ்வு ஆகாது.

**ஈயார் தேட்டை தீயார் கொள்வார்** **4**

எவருக்கும் உதவாத கருமிகளின் பொருள்களை தீயவர்கள் கொள்ளை அடித்துக் கொண்டு போய்விடுவார்கள்.

**உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு** **5**

குறைவாக உண்ணுதல் பெண்களுக்குக் கவர்ச்சியாயிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்** 6

ஊரோடு விரோதித்துக் கொண்டால் குடும்பத்தோடு அழிந்து விடுவார்.

**எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்** 7

கணக்கும் இலக்கியமும் கண்களைப் போல சிறப்பானவை.

**ஏவா மக்கள் மூவா மருந்து** 8

சொல்லும் முன்னே குறிப்பை உணர்ந்து செய்யும் மக்கள் அமுதத்துக்கு இணையானவர்கள்.

**ஐயம் புகினும் செய்வன செய்** 9

வறுமையால் பிச்சை எடுக்க நேர்ந்தாலும் செய்ய வேண்டிய நல்ல காரியத்தை செய்யாமல் விட்டுவிடக்கூடாது.

**ஒருவனைப் பற்றி ஓரகத்து ஒரு** 10

ஒருவனைக் கணவனாகத் தேர்ந்தெடுத்து ஒரு வீட்டிலேயே அவனுடன் வாழ வேண்டும்.

**ஓதலின் நன்றே வேதியர்க்கு ஒழுக்கம்** 11

வேதத்தைப் படிப்பதைக் காட்டிலும் பிராமணருக்கு மிகவும் சிறப்பை அளிப்பது ஒழுக்க மேம்பாடே ஆகும்.

**ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு** 12

பொறாமை எண்ணத்தோடு பேசுவது செல்வத்தை அழித்துவிடும்.

**அஃகமும் காசும் சிக்கெனத் தேடு** 13

சிக்கனமாக இருந்து தானியத்தையும் செல்வத்தையும் சம்பாதிக்க வேண்டும்.

**கற்பு எனப்படுவது சொல் திறம்பாமை** 14

கணவன் சொற்படி நடப்பதே பெண்களுக்கு நிறை ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காவல் தானே பாவையர்க்கு அழகு** **15**

ஒழுக்கத்தோடு தங்களைக் காத்துக்கொள்வதே பெண்களுக்கு உரிய சிறப்பாகும்.

**கிட்டாதாயின் வெட்டென மற** **16**

ஆசைப்பட்டது கிடைக்காவிட்டால் அதை உடனே மறந்து விடுவது சிறப்பு.

**கீழோர் ஆயினும் தாழ உரை** **17**

அடிமை வேலை செய்யக்கூடியவர்களானாலும் கூட அவர்களிடம் மரியாதையோடு பேசிப்பழகுவது நன்மை தரும்.

**குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை** **18**

குற்றம் குறைகளையே சொல்லிக்கொண்டிருந்தால் சுற்றத்தார் என யாரும் இருக்க மாட்டார்கள்.

**கூர் அம்பு ஆயினும் வீரியம் பேசேல்** **19**

தன் கையில் மிகக் கூர்மையான ஆயுதம் வைத்திருந்த போதிலும் கர்வத்தோடு வீரம் பேசக்கூடாது.

**கெடுவது செய்யின் விடுவது கருமம்** **20**

தீங்கு செய்தவருக்குப் பதிலுக்குத் தீங்கு செய்யாமல் மன்னித்து விடுவது சிறந்த செயலாகும்.

**கேட்டில் உறுதி கூட்டும் உடைமை** **21**

வறுமையில் வாடினாலும் கூட மனம் தளராமல் இருப்பதே செல் வத்தைச் சேர்ப்பிக்கும்.

**கைப்பொருள் தன்னில் மெய்ப்பொருள் கல்வி** **22**

கைவசம் இருக்கும் செல்வத்தைக் காட்டிலும் கல்வியே நிரந்தரமான உண்மையான செல்வமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொற்றவன் அறிதல் உற்ற இடத்துஉதவி** 23

மக்களுக்கு ஆபத்து உண்டானபோது அதை உடனே அறிந்து தகுந்த உதவி செய்வதே ஆட்சி செய்வோர் கடமை ஆகும்.

**கோள் செவிக்குறளை காற்றுடன் நெருப்பு** 24

கோள் கூறுவதை விரும்பிக் கேட்பவர் காதிலே மேலும் கோள் மூட்டிவிட்டால் காற்றும் நெருப்பும் பற்றி எரிவது போலாகும்.

**கௌவை சொல்லின் எவ்வருக்கும் பகை** 25

பிறர்மீது பழிச் சொற்களைக் கூறுவதனால் எல்லோரிடமும் விரோதம் ஏற்படும்.

**சந்ததிக்கு அழகு வந்தி செய்யாமை** 26

பரம்பரை விளங்குவதற்கு மக்கட் செல்வத்தோடு வாழ வேண்டும்.

**சான்றோர் என்கை ஈன்றோட்கு அழகு** 27

தன்னுடைய பிள்ளைகளை உலகத்தார் அறிஞர் என்று போற்றுவதே தாய்க்குச் சிறப்பாகும்.

**சிவத்தைப் பேணில் தவத்திற்கு அழகு** 28

தவம் செய்வோருக்குச் சிறப்பு சிவபெருமானை துதித்து வழிபாடு செய்வதே.

**சீரைத் தேடின் ஏரைத் தேடு** 29

சிறப்பாக வாழ ஆசைப்பட்டால் உழவுத் தொழிலைக் கைக்கொள்ள வேண்டும்.

**சுற்றத்திற்கு அழகு சூழ இருத்தல்** 30

நன்மையிலும் தீமையிலும் விலகாமல் இருப்பதே உறவினருக்குச் சிறப்பு ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சூதும் வாதும் வேதனை செய்யும்** 31

சூதாட்டங்களும் தர்க்கப் பேச்சுக்களும் துன்பத்தை அளிக்கும்.

**செய்தவம் மறந்தால் கைத்தவம் ஆளும்** 32

தான் செய்யக்கூடிய தவத்தை எவன் மறந்து விடுகின்றானோ அவனை அறியாமை ஆட்சி செலுத்தும்.

**சேமம் புகினும் யாமத்து உறங்கு** 33

காவல் காப்பதற்குச் சென்ற போதிலும் நள்ளிரவில் சிறிது நேரமாயினும் தூங்குவாயாக.

**சை ஒத்து இருந்தால் ஐயம் இட்டு உண்** 34

செல்வம் இருக்குமானால் பிறருக்கு உணவு அளித்துவிட்டு உண்ண வேண்டும்.

**சொக்கர் என்பர் அத்தம் பெறுவர்** 35

தூய்மையான உள்ளமும், பொருளும் உள்ளவரானால் வாழ்வில் முழு இன்பமும் அடைவர்.

**சோம்பர் என்பர் தேம்பித் திரிவர்** 36

முயற்சி செய்து உழைக்காதவர் வறுமையால் துன்புற்றுத் திரிவார்.

**தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை** 37

தகப்பனார் கூறும் அறிவுரைக்கு மிஞ்சிய சாஸ்திரம் வேறு இல்லை.

**தாயிற் சிறந்து ஒரு கோயிலும் இல்லை** 38

தாயையே வணங்க வேண்டும். அதற்கு மேலான கோயில் எதுவுமே இல்லை.

**திரை கடல் ஓடியும் திரவியம் தேடு** 39

அலைகடலுக்கு அப்பால் சென்றாவது பொருள் தேட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தீராக் கோபம் போராய் முடியும்** 40

அடங்காத சினம் பெரிய சண்டையில் கொண்டுவிடும்.

**துடியாப் பெண்டிர் மடியில் நெருப்பு** 41

கணவனுக்கு எதிர்பாராத துன்பம் நேரிட்டபொழுது துடிதுடிக்காத மனைவியானவள் வயிற்றில் கட்டி வைத்துள்ள நெருப்புப் போன்றவள்.

**தூற்றும் பெண்டிர் கூற்று எனத் தகும்** 42

அவதூறுகளையே பேசித்திரியும் பெண் எமன் என்று சொல்லக் கூடியவள் ஆவாள்.

**தெய்வம் சீறின் கைதவம் மாளும்** 43

கடவுளின் கோபத்துக்கு ஆளானால் கைவரப்பெற்ற தவம் அழிந்து போகும்.

**தேடாது அழிக்கின் பாடாய் முடியும்** 44

முயன்று பொருளைச் சம்பாதிக்காமல் இருக்கின்றவற்றையே செலவு செய்துகொண்டிருந்தால் முடிவில் துன்பம் உண்டாகும்.

**தையும் மாசியும் வையகத்து உறங்கு** 45

தை, மாசி மாதங்களில் வைக்கோல் வேய்ந்த வீட்டில் உறங்கினால் காலநிலைக்குத் தகுந்தபடி சுகமாக இருக்கும்.

**தொழுது ஊண் சுவையின்**
**உழுது ஊண் இனிது** 46

வணங்கி வேலைபார்த்து வயிறு வளர்ப்பதை விட வேளாண்மை செய்து உண்பதே சிறப்புடையதாகும்.

**தோழனோடும் ஏழைமை பேசேல்** 47

நெருங்கிய நண்பனிடத்திலும்கூட வறுமை நிலையைச் சொன்னால் மிகவும் கேவலமாக நினைப்பான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நல் இணக்கம் அல்லது அல்லல் படுத்தும் 48**

நல்லவர்கள் தொடர்பு நன்மையாகும். கெட்டவர்கள் தொடர்பு தீமை யாகும்.

**நாடு எங்கும் வாழக்கேடு ஒன்றும் இல்லை 49**

தேசம் பூராகவும் செழித்துத் தழைத்தால் துன்பமே இல்லை.

**நிற்கக் கற்றல் சொல் திறம்பாமை 50**

நிலையான கல்வி கற்றவர் என்பவர் வாக்குறுதி உள்ளவரே ஆவர்.

**நீர் அகம் பொருந்திய ஊர் அகத்திரு 51**

தண்ணீர் வசதி நிறைந்த ஊரிலே வாழ்வாயாக.

**நுண்ணிய கருமம் எண்ணித் துணி 52**

மிகச்சிறிய செயலானாலும் கூட தீர யோசித்தே செய்ய வேண்டும்.

**நூன் முறை தெரிந்து சீலத்து ஒழுகு 53**

அற நூல்களின் நீதிமுறைகளைத் தெரிந்து ஒழுக்கத்தோடு வாழ வேண்டும்.

**நெஞ்சை ஒளித்து ஒரு வஞ்சகம் இல்லை 54**

மனதுக்குத் தெரியாமல் ஏமாற்றமான காரியம் ஏதும் இல்லை.

**நேரா நோன்பு சீர் ஆகாது 55**

மனம் இணங்கிச் செய்யும் நோன்பு சிறப்பு அளிக்காது.

**நைபவர் எனினும் நொய்ய உரையேல் 56**

எளியவர் ஆனாலும் மனம் நோகும்படியான சொற்களைக் கூற வேண்டாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நொய்யவர் என்பர் வெய்யவர் ஆவர்** 57

தோற்றத்தில் எளிமையாகத் தெரிந்தாலும் செயல் மூலம் பெரியவராகத் திகழ்ந்துவிடுவார்.

**நோன்பு என்பது கொன்று தின்னாமை** 58

மற்ற உயிர்களைக் கொன்று தின்னாமல் இருப்பதே விரதம் ஆகும்.

**பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும்** 59

வேளாண்மை செய்துள்ள விளைச்சலைக் காணும்போது அவருடைய நல்வினைப் பயன் தெரிந்துவிடும்.

**பாலோடு ஆயினும் காலம் அறிந்து உண்** 60

பாலினால் தயாரித்த உணவுப் பொருளானாலும் நேரம் தவறி சாப்பிடக் கூடாது.

**பிறன் மனை புகாமை அறம் எனத் தகும்** 61

பிறர் மனைவியிடம் இச்சை வைத்து அங்கே போகாமல் இருப்பதே சிறந்த ஒழுக்கநெறி ஆகும்.

**பீரம் பேணில் பாரம் தாங்கும்** 62

தன் தாய்ப்பாலைக் குடித்து வளர்ந்த குழந்தை வலிமையோடு பொறுப்பான காரியத்தை நிறைவேற்றும்.

**புலையும் கொலையும் களவும் தவிர்** 63

புலால் உணவு, உயிர்க்கொலை, திருட்டுத்தொழில் இவற்றை ஒழித்து விடுவாயாக.

**பூரியோர்க்கு இல்லை சீரிய ஒழுக்கம்** 64

கீழ்த்தரமானவர்களிடம் சிறப்பு மிக்க பண்பு இருக்காது.

**பெற்றோர்க்கு இல்லை சுற்றமும் சினமும்** 65

உண்மையான ஞானிகளுக்கு உறவு என்னும் ஆசை கோபம் எதுவும் இருப்பதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பேதமை என்பது மாதர்க்கு அணிகலம் 66**

தெரியாதவர் போல் அமைதியாயிருப்பது பெண்களுக்கு ஆபரணத்தைப் போன்ற பண்பாகும்.

**பையச் சென்றால் வையகம் தாங்கும் 67**

மெதுவாகச் செய்யக்கூடிய செயல் வெற்றி அளிக்கும்.

**பொல்லாங்கு என்பவை எல்லாம் தவிர் 68**

தீமையான செயல்கள் எல்லாவற்றையும் அகற்றிவிட வேண்டும்.

**போனகம் என்பது தான் உழந்து உண்டல் 69**

தன்னுடைய சுயமுயற்சியால் தேடி உண்பதே சிறப்புடையது.

**மருந்தே ஆயினும் விருந்தோடு உண் 70**

அமிர்தமே கிடைத்தாலும் விருந்தினருடன் சாப்பிடுவது சிறப்பு.

**மாரி அல்லது காரியம் இல்லை 71**

உலகில் எல்லாக் காரியங்களுக்கும் மழையே முக்கியமானது.

**மின்னுக்கெல்லாம் பின்னுக்கு மழை 72**

மின்னல் தோன்றினால் மழைவரும் என்பதற்கு அடையாளம்.

**மீகாமன் இல்லா மரக்கலம் ஓடாது 73**

மாலுமி இல்லாமல் மரக்கப்பல் ஓடாது.

**முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் 74**

முன்பகுதியில் யாருக்கேனும் தீங்கு செய்திடில் பிற்பகுதியில் தனக்கே தீங்கு நேரிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்** 75

அறிவு சான்ற பெரியோர்கள் சொல்லும் அனுபவ மொழிகள் அமிர்தம் போன்றவை ஆகும்.

**மெத்தையில் படுத்தல் நித்திரைக்கு அழகு** 76

மெத்தையில் படுத்துத் தூங்கினால் நல்ல தூக்கம் வரும்.

**மேழிச் செல்வம் கோழை படாது** 77

வேளாண்மையில் வந்த செல்வம் பழுதற்றதாகும்.

**மைவிழியார் தம் மனை அகன்று ஒழுகு** 78

கண்ணால் மயக்கும் பொதுமகளிர் வீட்டின் பக்கத்திலேகூட போகாமல் இருப்பது நன்மையாகும்.

**மொழிவது மறுக்கின் அழிவது கருமம்** 79

அனுபவம் உள்ளவர் கூறுவதை மீறிச் செய்யும் காரியம் கெட்டுப் போகும்.

**மோனம் என்பது ஞான வரம்பு** 80

மௌன நிலை. (பேசாமல் இருந்து தியானித்தல் ஞானத்தில் தெளிவைக் கூறும்)

**வளவன் ஆயினும் அளவு**
**அறிந்து அழித்து உண்** 81

சோழ மன்னனுக்கு இணையான செல்வம் இருப்பினும் வரவுக்கு ஏற்ற செலவு செய்தல் வேண்டும்.

**வானம் சுருங்கில் தானம் சுருங்கும்** 82

மழையின் அளவு குறைந்து விடுமேயானால் தானங்களும் குறைவாகி விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விருந்து இல்லோர்க்கு இல்லை பொருந்திய ஒழுக்கம்** **83**

விருந்தினரை உபசரிக்கும் பண்பு இல்லாதவர்களிடம் இல்லற தர்மம் நிறைவு பெறாது.

**வீரன் கேண்மை கூர் அம்பாகும்** **84**

வீரனுடைய நட்பானது தன் கையிலே கூர்மையான அம்பு இருப்பதைப் போலாகும்.

**உரவோர் என்கை இரவாது இருத்தல்** **85**

அறிஞர் எனக் கூறப்படுவோர் எவரிடமும் சென்று யாசியாமல் இருப்பதே சிறப்பு.

**ஊக்கம் உடைமை ஆக்கத்திற்கு அழகு** **86**

மனம் தளராது உறுதியோடு இருப்பது செழிப்புக்கு உயர்வாகும்.

**வெள்ளைக்கு இல்லை கள்ளச் சிந்தை** **87**

தூய்மையான மனத்தவர்க்கு வஞ்சக நினைப்பு எழாது.

**வேந்தன் சீறின் ஆம் துணை இல்லை** **88**

மன்னனின் கோபத்துக்கு ஆளாகியவனுக்கு யாருமே துணையாக வரமாட்டார்.

**வைகல் தோறும் தெய்வம் தொழு** **89**

நாள் தோறும் கடவுளை வணங்குதல் நன்மை தரும்.

**ஒத்த இடத்து நித்திரை கொள்** **90**

சமமான தரையில் படுத்துத் தூங்குவது நல்லது.

**ஓதாதவர்க்கு இல்லை உணர்வோடு ஒழுக்கம்** **91**

நீதி நூல்களைப் படிக்காதவர்களுக்கு நல்லொழுக்க அறிவு இருக்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூதுரை

## கடவுள் வாழ்த்து

**வாக்குண்டாம் நல்ல மனம் உண்டாம் மாமலராள்**
**நோக்கு உண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு**
**துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்**
**தப்பாமல் சார்வார் தமக்கு.**

தினந்தோறும் மலர் கொண்டு விநாயகப் பெருமானின் திருவடிகளைத் தொழுவோருக்கு சொல்வளம் உண்டாகும். திருமகள் அருள் பார்வை கிடைக்கும், உடலை நோய் வருத்தாது.

## நூல்

**நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந் நன்றி**
**"என்று தருங் கொல்?" என வேண்டா - நின்று**
**தளரா வளர் தெங்கு தாள் உண்ட நீரைத்**
**தலையாலே தான் தருதலால் 1**

தென்னை மரத்துக்கு அடியிலே நீர் பாய்ச்சுகிறோம், சுவையுடைய இளநீர் மேலே காய்க்கிறது. அதுபோல நற்குணமுள்ள ஒருவருக்கு நன்மை செய்தால் நமக்கு நன்மையே உண்டாகும். பதிலுக்கு உதவியை எதிர்பார்த்து எதையும் செய்ய வேண்டாம்.

**நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்**
**கல் மேல் எழுத்துப் போல் காணுமே - அல்லாத**
**ஈரமிலா நெஞ்சத்தார்க்கு ஈந்த உபகாரம்**
**நீர் மேல் எழுத்துக்கு நேர் 2**

நல்லவருக்கு செய்த உதவி கல்லிலே செதுக்கப்பட்டது போல் நிலையாக விளங்கும், இரக்கமற்றவருக்குச் செய்த உதவியானது தண்ணீரிலே எழுதிய எழுத்தைப் போல் அப்பொழுதே அழிந்து விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இன்னா இளமை வறுமை வந்து எய்தியக் கால்**
**இன்னா அளவில் இனியவும் - இன்னாத**
**நாள் அல்லா நாள் பூத்த நண் மலரும் போலுமே**
**ஆள் இல்லா மங்கைக்கு அழகு** 3

வாலிபத்தில் வறுமையும் முதுமையில் செல்வமும் உண்டானால் அதனால் துன்பமே விளையும்; இன்பத்தைக் காண இயலாது, தேவை இல்லாத போது மலரை யார் சூடிக்கொள்வார்; கணவனைப் பெற்றிராத மங்கை என்னதான் அழகோடு திகழ்ந்தாலும் அதனால் பயன் என்ன?

**அட்டாலும் பால் சுவையில் குன்றாது அளவளாய்**
**நட்டாலும் நண்பு அல்லார் நண்பு அல்லர்**
**கெட்டாலும் மேன்மக்கள் மேன் மக்களே சங்கு**
**சுட்டாலும் வெண்மை தரும்** 4

பாலை எவ்வளவு காய்ச்சினாலும் அதன் சுவை குறையாது; சங்கைச் சுட்டாலும் அதன் நிறம் வெண்மையாகவே காணப்படும் பண்புடைய மேலோர்கள் வறுமையில் வாடிய போதிலும் தங்கள் தகுதியை இழக்க மாட்டார்கள். பண்பற்றவர்கள் நெருங்கிப் பழகினாலும் நல்ல நண்பர் களாக இருக்கமாட்டார்கள்.

**அடுத்து முயன்றாலும் ஆகும் நாள் அன்றி**
**எடுத்த கருமங்கள் ஆகா - தொடுத்த**
**உருவத்தால் நீண்ட உயர்மரங்கள் எல்லாம்**
**பருவத்தால் அன்றிப் பழா** 5

நீண்ட உயர்ந்த மரங்கள்; ஆனாலும் தகுந்த பருவகாலத்திலே தான் பழங்களை அளிக்கும; என்னதான் அடிக்கடி முயன்ற போதிலும் மேற்கொண்ட காரியங்கள் ஆகும் காலத்திலே தான் கைகூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உற்ற இடத்தில் உயிர் வழங்கும் தன்மையோர்**
**பற்றவரைக் கண்டால் பணிவரோ? - கல் தூண்**
**பிளந்து இறுவது அல்லாமல் பெரும் பாரம் தாங்கின்**
**தளர்ந்து வளையுமோ தான்** 6

கருங்கல் தூணான போதிலும் அதிகமான பாரத்தைச் சுமத்தினால் அது முறிந்து உடைவது போல, மானம் உள்ளோர், விரோதிகளைக் கண்டு பயந்து வணங்காமல் உயிரையே விட்டு விடக்கூடிய இயல்புடையவர்கள் ஆவார்கள்.

**நீர் அளவே ஆகுமாம் நீர் ஆம்பல்; தான் கற்ற**
**நூல் அளவே ஆகுமாம் நுண் அறிவு - மேலைத்**
**தவத்து அளவே ஆகுமாம் தான் பெற்ற செல்வம்**
**குலத்து அளவே ஆகுமாம் குணம்** 7

அல்லி தண்ணீரின் அளவுக்குத் தகுந்தபடி உயர்ந்து வளரும்; ஒருவர் படித்த நூல்களின் தரத்திற்கு ஏற்ப கல்வி அமையும்; செல்வமும் நல்வினையை ஒட்டியே இருக்கும்; குணமும் குடும்பத்தை அனுசரித்தே காணப்படும்.

**நல்லவரைக் காண்பதுவும் நன்றே; நலம்மிக்க**
**நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே - நல்லார்**
**குணங்கள் உரைப்பதுவும் நன்றே; அவரோடு**
**இணங்கி இருப்பதுவும் நன்றே** 8

நல்ல குணம் உள்ளவரைக் காண்பது, அவர் கூறும் வழிகளைக் கேட்பது அவருடைய பண்புகளை எடுத்துச் சொல்வது, அத்தகைய வரோடு இணைந்து இருப்பது எல்லாம் நன்மை தரும்.

**தீயாரைக் காண்பதுவும் தீதே திரு அற்ற**
**தீயார் சொல் கேட்பதுவும் தீதே - தீயார்**
**குணங்கள் உரைப்பதுவும் தீதே அவரோடு**
**இணங்கி இருப்பதுவும் தீது** 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெட்ட குணத்தவரைக் காண்பது, அவருடைய பயனற்ற மொழி களைக் கேட்பது, அவருடைய கெட்ட குணங்களைப் பேசுவது, அத்த கையவரோடு சேர்ந்து இருப்பது யாவுமே தீமையை உண்டாக்கும்.

**நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழி ஓடிப்**
**புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் - தொல் உலகில்**
**நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு**
**எல்லோர்க்கும் பெய்யும் மழை 10**

நெல் பயிருக்கு இறைத்த தண்ணீரானது கால்வாய் வழியாகச் சென்று புல்லுக்கும் பயன்படுகிறது; இவ்வுலகில் நல்லவர் ஒருவர் இருக்கும் காரணமாகப் பொழியும் மழையானது மற்ற அனைவருக்கும் பயன்படுகிறது.

**பண்டு முளைப்பது அரிசியே ஆனாலும்**
**விண்டு உமிபோனால் முளையாதாம் - கொண்டபேர்**
**ஆற்றல் உடையார்க்கும் ஆகாது அளவு இன்றி**
**ஏற்ற கருமம் செயல் 11**

அரிசி விளைவதற்கு உமியின் துணை தேவைப்படுகிறது. ஒரு காரியத்தை செய்து முடிக்க எவ்வளவு திறமை இருந்த போதிலும், தகுந்த ஒருவர் துணை இல்லாமல், தனியாக அதைச் செய்துவிட முடியாது.

**மடல் பெரிது தாழை; மகிழ் இனிது கந்தம்**
**உடல் சிறியர் என்று இருக்க வேண்டா - கடல் பெரிது**
**மண்ணீரும் ஆகாது; அதன் அருகே சிற்றூறல்**
**உண்ணீரும் ஆகி விடும் 12**

தாழம் பூவின் மடல் பெரிது ஆனால் அதைவிட மகிழம் பூ சிறிது என்றாலும் மணம் அதிகம். கடல் பெரிதாக இருந்த போதிலும் அதன் நீர் அழுக்கைப் போக்கக் கூட உதவாது. அதன் அருகே உள்ள ஊற்று நீரோ குடிப்பதற்கு உபயோகமாகும். சிறிய உருவமாயிருந்த போதிலும் அவரை மதியாமல் இருக்க வேண்டாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்**
**அவையல்ல நல்ல மரங்கள் - சபை நடுவே**
**நீட்டு ஓலை வாசியா நின்றான் குறிப்பு அறிய**
**மாட்டாதவன் நன் மரம் 13**

கல்வி அறிவுடையோர் சபையிலே ஒருவர் கொடுக்கும் ஓலைச் சுவடியைப் படிக்கத் தெரியாதவனும் பிறருடைய உள்ளக் குறிப்பை உணராமல் நிற்பவனும் கொம்பு கிளைகளுடன் காட்டிலே நிற்கின்ற மரத்தைப் போன்றவன்.

**கான மயில் ஆடக் கண்டிருந்த வான் கோழி**
**தானும் அதுவாகப் பாவித்து - தானும் தன்**
**பொல்லாச் சிறகை விரித்து ஆடினால் போலுமே**
**கல்லாதான் கற்ற கவி 14**

முறையாகக் கல்வி கற்காமல், கற்றவரைப் போல் பாசாங்கு செய்வது, தோகை விரித்து ஆடும் மயிலைப் பார்த்து தானும் மயிலாகக் கருதி வான்கோழி தன்னுடைய சிறகை விரித்து ஆடுவது போலாகும்.

**வேங்கை வரிப்புலி நோய் தீர்த்த விடகாரி**
**ஆங்கு அதனுக்கு ஆகாரம் ஆனால்போல் - பாங்கு அழியாப்**
**புல் அறிவாளருக்குச் செய்த உபகாரம்**
**கல்லின் மேல் இட்ட கலம் 15**

பாம்பு கடித்துக் கிடந்த வரிப்புலிக்கு விஷ வைத்தியம் செய்த மருத்துவன் அப்போதே அந்தப் புலிக்கு இரையானது போல் அற்பபுத்தி உடையவர்களுக்கு உதவி செய்தால், கல்லின் மேல் போட்ட மண் பானையைப்போல் நமக்கே தீமையாய் முடியும்.

**அடக்கம் உடையார் அறிவிலர் என்று எண்ணிக்**
**கடக்கக் கருதவும் வேண்டா - மடைத் தலையில்**
**ஓடுமீன் ஓட உறுமீன் வரும் அளவும்**
**வாடி இருக்குமாம் கொக்கு 16**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடையிலே சிறிய மீன்கள் ஓடுவதை விட்டுவிட்டு, பெரிய மீனாக வருவதைக் கொத்திப் பிடிப்பதற்காகக் கொக்கு அடங்கி இருக்குமாம்; அது போல அடக்கமாக இருப்பவர் அறிவற்றவர் என்று அவரை அலட்சியமாக நினைக்க வேண்டாம்.

**அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல்**
**உற்றுழித் தீர்வார் உறவு அல்லர்; - அக்குளத்தில்**
**கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே**
**ஒட்டி உறவார் உறவு** **17**

தண்ணீர் உள்ள குளத்திலே கொட்டி, ஆம்பல், நெய்தல் ஆகியன முளைக்கின்றன. அதிலே நீர்ப்பறவைகளும் வாழ்கின்றன. குளத்திலே நீர் வற்றியதும் பறவைகள் எல்லாம் பறந்து விடுகின்றன; ஆனால் கொட்டி, ஆம்பல், நெய்தல் மட்டும் வாடிக்கிடக்கின்றன; அதுபோல் வாழ்விலும் தாழ்விலும் நீங்காமல் சேர்ந்து இருப்பவரே உண்மையான உறவினர் ஆவார்.

**சீரியர் கெட்டாலும் சீரியரே; சீரியர் மற்று**
**அல்லாதார் கெட்டால் அங்கு என்னாகும்? - சீரிய**
**பொன்னின் குடம் உடைந்தால் பொன்னாகும். என் ஆகும்**
**மண்ணின் குடம் உடைந்தக் கால்** **18**

சிறப்பு மிக்கவர்கள் வறுமையில் வாடிய போதிலும் அவர்களுடைய சிறப்புக் குன்றாது; பண்பற்றவர்கள் கெட்டால் அவர்கள் கதி என்ன ஆகும்? தங்கக்குடம் உடைந்து விடுமானால் மறுபடியும் தங்கமாகி விடும், மண் குடம் உடைந்தால் என்ன பயன்?

**ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல் நீர்**
**நாழி முகவாது நானாழி - தோழி**
**நிதியும் கணவனும் நேர் படினும் தம்தம்**
**விதியின் பயனே பயன்** **19**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலிலுள்ள நீரை எவ்வளவு தான் அமிழ்த்தி மொண்டாலும் ஒரு படி அளவில் நான்குபடி கொள்ளாது; செல்வமும் கணவனும் ஒரு பெண்ணுக்குக் கிடைத்த போதிலும் அவள் விதிப்படியே தான் வாழ்வு அமையும்.

**உடன் பிறந்தார் சுற்றத்தார் என்று இருக்கவேண்டா**
**உடன் பிறந்தே கொல்லும் வியாதி - உடன் பிறவா**
**மாமலையில் உள்ள மருந்தே பிணி தீர்க்கும்**
**அம் மருந்து போல் வாரும் உண்டு** 20

உடலில் தோன்றிய நோயே அதனைக் கொல்லுகிறது; அதைப்போல, கூடப் பிறந்தோர் உதவிபுரியும் உறவினர் என எண்ண வேண்டாம்; பெரிய மலையில் உள்ள மூலிகை உயிரைக் காப்பாற்றுவது போல, எவரோ ஒருவர் உதவி செய்யக் கூடும்.

**இல்லாள் அகத்து இருக்க இல்லாதது ஒன்றும் இல்லை**
**இல்லாளும் இல்லாளே ஆமாயின் - இல்லாள்**
**வலிகிடந்த மாற்றம் உரைக்குமேல் - அவ்இல்**
**புலி கிடந்த தூறாய் விடு** 21

நற்குணமுள்ள மனைவி ஒரு இல்லத்துக்கு வாய்த்துவிடுவாளானால் அங்கே எந்தக் குறையும் இருக்காது; கொடுமையும் எதிர்த்து வாதாடுவதுமான மனைவி இருப்பாளானால் அந்த இல்லமானது புலி தங்கிய குகைபோல் ஆகும்.

**எழுதியவாறே தான் இரங்கும் மட நெஞ்சே!**
**கருதியவாறு ஆமோ கருமம்? - கருதிப் போய்க்**
**கற்பகத்தைச் சேர்ந்தோர்க்கும் காஞ்சிரங்காய் ஈந்தேல்**
**முற்பாவத்தில் செய்த வினை** 22

நினைத்தபடி எல்லாம் நடந்துவிடுமோ? விதிப்படியே தான் எல்லாம் நடக்கும்; கற்பக விருட்சத்தை அடைந்தோருக்கு எட்டிக்காய் கிடைக்குமானால், விதியின் பயனே என்று உணர்ந்து கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கற்பிளவோடு ஒப்பர் கயவர்; கடும் சினத்துப்**
**பொற் பிளவோடு ஒப்பாரும் போல்வரே - வில் பிடித்து**
**நீர் கிழிய எய்த விடுப் போல மாறுமே**
**சீர் ஒழுகு சான்றோர் சினம்** **23**

கீழ்த்தரமானவர்களுடைய கோபமானது கல் பிளப்பது போல் உடைந்து பிரிந்து விடும் தன்மையானது. தங்கத்திலே பிளவு உண்டானால் மீண்டும் இணைந்து விடுவது போல் யாரேனும் கூட்டுவித்தால் கூடிவிடும் தன்மையுடையோரும் உள்ளனர். நீரிலே அம்பு எய்தால் அது உடனே மறைவது போல் சான்றோர்களுக்கு ஏற்படும் கோப மானது உடனே மறைந்துவிடும் தன்மை கொண்டது.

**நற்றாமரைக் கயத்தில் நல் அன்னம் சேர்ந்தாற் போல்**
**கற்றாரைக் கற்றாரே காமுறுவர் - கற்பிலா**
**மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டில்**
**காக்கை உகக்கும் பிணம்** **24**

அன்னப் பறவையானது தாமரை உள்ள குளத்தைத் தேடிச் செல்வது போல, அறிஞர் அறிஞரையே தேடிச் செல்வர்; காக்கையானது சுடு காட்டில் பிணத்தைத் தேடிச் செல்வது போல், அறிவற்றவரை அறிவற்றவரே தேடிச்செல்வர்.

**நஞ்சு உடைமை தான் அறிந்து நாகம் கரந்து உறையும்**
**அஞ்சாப் புறம் கிடக்கும் நீர்ப் பாம்பு - நெஞ்சில்**
**கரவுடையார் தம்மைக் கரப்பர் கரவார்**
**கரவிலா நெஞ்சத் தவர்** **25**

விஷம் இல்லாத நீர்ப் பாம்பானது பயமின்றி எங்கும் கிடப்பது போல், வஞ்சனை இல்லாத உள்ளத்தினர் வெளிப்படையாகப் பேசுவர்; விஷத்தோடு கூடிய நாகபாம்பானது புற்றில் மறைந்து வசிப்பது போல், வஞ்சகர் கபடமாகவே பேசுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மன்னனும் மாசு அறக் கற்றோனும் சீர் தூக்கின்**
**மன்னனில் கற்றோன் சிறப்பு உடையன் - மன்னர்க்குத்**
**தன் தேசம் அல்லால் சிறப்பு இல்லை கற்றோர்க்குச்**
**சென்ற இடம் எல்லாம் சிறப்பு** **26**

அரசனையும் அறிஞனையும் ஒப்பிட்டால், அறிஞனே சிறந்தவன்; அரசனுக்குத் தன்னுடைய நாட்டிலே மட்டும் கௌரவம்; அறிஞனுக்குப் போகும் இடங்களில் எல்லாம் பெருமை உண்டாகும்.

**கல்லாத மாந்தர்க்குக் கற்று உணர்ந்தார் சொல் கூற்றம்**
**அல்லாத மாந்தர்க்கு அறம் கூற்றம் - மெல்லிய**
**வாழைக்குத் தான் ஈன்ற காய் கூற்றம் கூற்றமே**
**இல்லிற்கு இசைந்து ஒழுகாப் பெண்** **27**

மூடருக்குக் கற்றவர் சொல்லும், தீயவர்களுக்கு தருமமும், வாழைக்கு அதன் காயும், பொருத்தமற்ற மனைவியால் கணவனுக்கு எமன் போல, துன்பத்தையே அளிக்கக் கூடியதாகும்.

**சந்தன மென் குறடு தான் தேய்ந்த காலத்தும்**
**கந்தம் குறை படாது; ஆதலால் - தம்தம்**
**தனம் சிறியர் ஆயினும் தார் வேந்தர் கேட்டால்**
**மனம் சிறியர் ஆவரோ மற்று?** **28**

சந்தனக் கட்டையானது எவ்வளவு தேய்ந்த போதிலும் அதன் மணம் குன்றாது; அரசருடைய செல்வமானது குறைந்து வறுமையுற்ற போதிலும் அவர்களுடைய தாராளத் தன்மையானது குறைந்து விடாது.

**மருவு இனிய சுற்றமும் வான் பொருளும் நல்ல**
**உருவும் உயர் குலமும் எல்லாம் - திரு மடந்தை**
**ஆம் போது அவளோடும் ஆகும்; அவள் பிரிந்து**
**போம் போது அவளோடும் போம்** **29**

சூழ்ந்து வாழும் உறவினர் அடைந்துள்ள செல்வம், அழகான தோற்றம் இவை யாவும் லட்சுமி தேவியின் அருள் இருந்தால் கைகூடும். அவள் நீங்கும் பொழுது எல்லாம் போய்விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சாந்தனையும் தீயனவே செய்திடினும் தாம் அவரை**
**ஆந்தனையும் காப்பர் அறிவுடையோர் - மாந்தர்**
**குறைக்கும் தனையும் குளிர் நிழலைத் தந்து**
**மறைக்குமாம் கண்டீர் மரம்** 30

மரத்தை வெட்டுகின்றவரை அது வெயிலை மறைத்து குளிர்ந்த நிழலைத் தருவது போல் தாம் சாகும் வரை தமக்குப் பிறர் தீமை புரிந்த போதிலும் சான்றோர் இயன்றவரை அவரைக் காப்பாற்றுவர்.

---

பெண்ணை நதியை பால்நெய்யாகப் பெருகிவரப் பாடியது.

**முத்தெறியும் பெண்ணை முதுநீ ரதுதவிர்ந்து**
**தத்திய நெய்பால் தலைப்பெய்து - குத்திச்**
**செருமலைத் தெய்வீகன் றிருக்கோவ லூர்க்கு**
**வருமளவுங் கொண்டோடி வா.**

வருணனைப் பொன்மாரி பொழியப் பாடியது.

**கருணையா லிந்தக் கடலுலகங் காக்கும்**
**வருணனே! மாமலையன் கோவல் - திருமணத்தில்**
**முன்மாரி பெய்யு முதுவா ரியை மாற்றிப்**
**பொன்மாரி யாகப் பொழி.**

திருக்கோவிலூரைச் சிறப்பித்துப் பாடியது.

**பொன்மாரி பெய்யுமூர் பூம்பருத்தி யாடையாம்**
**அந்நாள் வயலரிசி யாகுமூர் - எந்நாளும்**
**தேங்குபுக ழேபடைத்த சேதிமா நாடதனில்**
**ஓங்கும் திருக்கோவ லூர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்வழி

## கடவுள் வாழ்த்து

**பாலும் தெளி தேனும் பாகும் பருப்பும் இவை**
**நாலும் கலந்து உனக்கு நான் தருவேன் - கோலம் செய்**
**துங்கக் கரி முகத்துத் தூமணியே நீ எனக்குச்**
**சங்கத் தமிழ் மூன்றும் தா.**

விநாயகப் பெருமானே, அடியேனுடைய பூஜைகளையும் நிவேதனங்களையும் ஏற்றுக் கொண்டு இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ்ச் செல்வத்தையும் எனக்கு அருள் புரிய வேண்டும்.

## நூல்

**புண்ணியம் ஆம் பாவம் போம் போன நாள் செய்த அவை**
**மண்ணில் பிறந்தோர்க்கு வைத்த பொருள் - என்னும் கால்**
**ஈது ஒழிய வேறு இல்லை; எச்சமயத்தார் சொல்லும்**
**தீது ஒழிய நன்மை செயல் 1**

முற்பிறப்பில் செய்த பாவபுண்ணியங்களே இப்பிறப்பில் தேடி வைத்த பொருளாகும்; தீமையை விலக்கி நன்மையைச் செய்வதே எல்லா மதத்தினரும் போதிக்கும் உபதேச மொழியாகும்.

**சாதி இரண்டு ஒழிய வேறு இல்லை; சாற்றும் கால்**
**நீதி வழுவா நெறி முறையின் - மேதினியில்**
**இட்டார் பெரியோர், இடாதார் இழிகுலத்தோர்**
**பட்டாங்கில் உள்ளபடி 2**

இரண்டே சாதிகள் தான் உலகிலே உள்ளன. துன்புறுவோர்க்கு உதவி புரிவோர் உயர்ந்த சாதியினர்; உதவி புரியாதவர் - தாழ்ந்த சாதியினர்; உண்மை நூல்கள் போதிப்பதும் இதுவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இடும்பைக்கு இடும்பை இயல்பு உடம்புஇது அன்றே**
**இடும் பொய்யை மெய் என்று இராதே - இடும் கடுக**
**உண்டாயின் உண்டாகும் ஊழில் பெரு வலி நோய்**
**விண்டாரைக் கொண்டாடும் வீடு** **3**

நிலையற்ற இவ்வுடலை நிலையானது என்று எண்ணிக்கொண்டிருக்காமல், விரைவாக தர்மம் செய்வீர்களாக, பந்தபாசங்களை நீக்கியவர்களைப் போற்றுவர், முக்தி அடைவர்.

**எண்ணி ஒரு கருமம் யார்க்கும் செய்ய ஒண்ணாது**
**புண்ணியம் வந்து, எய்த போது அல்லால் - கண் இல்லான்**
**மாங்காய் விழ எறிந்த மாத்திரை கோல் ஒக்குமே**
**ஆங்காலம் ஆகும் அவர்க்கு** **4**

ஒரு காரியத்தைச் செய்ய முற்பட்டாலும் புண்ணியமான காலத்திலே தான் அது கைகூடும். மற்ற காலத்தில் செய்ய எண்ணுவது, பார்வையற்றவன் மாங்காய் பறிக்க மாத்திரைக் கோலை வீசியது போலாகும்.

**வருந்தி அழைத்தாலும் வராத வாரா**
**பொருந்துவன போமின் என்றால் போகா - இருந்து ஏங்கி**
**நெஞ்சம் புண்ணாக நெடுந்தூரம் தாம் நினைந்து**
**துஞ்சுவதே மாந்தர் தொழில்** **5**

எவ்வளவு தான் முயன்ற போதிலும் கிடைக்கக்கூடியவை தான் கிடைக்கும்; கிடைக்க வேண்டியதை வேண்டாம் என்று வெறுத்தாலும் விட்டு நீங்காது; இதை உணராமல், நினைத்து, மனம் நொந்து வாடி மாண்டு போவதே மனிதரின் தொழில் ஆகிவிட்டது.

**உள்ளதுஒழிய ஒருவர்க்கு ஒருவர் சுகம்**
**கொள்ளக் கிடையா குவலயத்தில் வெள்ளக்**
**கடல் ஓடி மீண்டு கரையேறினால் என்**
**உடலோடு வாழும் உயிர்க்கு** **6**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வுலகில் வாழ்பவர்க்குக் கிடைக்கக்கூடியதே கிடைக்கும். பிறர் சுகம் அனுபவிக்கக் கிடையாது; கடல் கடந்து போய் பொருள் ஈட்டித் திரும்பினாலும் கிடைப்பதுதான் கிடைக்கும்.

**எல்லாப் படியாலும் எண்ணினால் இவ் வுடம்பு**
**பொல்லாப் புழுமலி நோய்ப் புண்குரம்பை - நல்லார்**
**அறிந்திருப்பார் ஆதலினால் ஆம் கமல நீர் போல்**
**பிரிந்திருப்பார் பேசார் பிறர்க்கு** **7**

பல வகையாலும் நினைத்துப் பார்த்தால், இந்த உடலானது பலவிதமான நோய்களுக்கு இருப்பிடமாகும்; அறிவுடையோர் இதை அறிந்திருப்பதோடு, இதைப்பற்றி எவரிடமும் பேசாமல் தாமரை இலைத் தண்ணீர் போல வாழ்வர்.

**ஈட்டும் பொருள் முயற்சி எண்ணிறந்த ஆயினும் ஊழ்**
**கூட்டும்படி அன்றிக் கூடாவாம் - தேட்டம்**
**மரியாதை காணும் மகிதலத்தீர் கேண் மின்**
**தரியாது காணும் தனம்** **8**

உலகில் வாழ்பவர்களே, பெருமுயற்சியால் அளவற்ற செல்வத்தைத் தேடினாலும் நல்லகாலம் இருந்தால் அது நிலைக்கும்; இல்லையேல் நிலைக்காது. மரியாதை ஒன்றே நிலையாக இருக்கக் கூடியது.

**ஆற்றுப் பெருக்கு அற்று அடிசுடும் அந்நாளும் அவ்ஆறு**
**ஊற்றுப் பெருக்காம் உலகுஊட்டும் - ஏற்றவர்க்கு**
**நல்ல குடிப் பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்**
**இல்லை என மாட்டார் இசைந்து** **9**

ஆற்றிலே வெள்ளம் வடிந்து வெப்பத்தால் மணல் சுட்ட போதிலும், மக்களுக்கு ஊற்று நீர் வழங்குவது போல், நல்ல குடும்பத்தினர் வறுமை நிலையில் இருந்த போதிலும், வந்து யாசிப்பவர்க்கு இல்லை என்று கூறாமல் இயன்றதைக் கொடுப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்**
**மாண்டார் வருவாரோ? மா நிலத்தீர் - வேண்டாம்**
**"நமக்கும் அது வழியே; நாம் போம் அளவும்**
**எமக்கு என்" என்று இட்டு உண்டு இரும்! 10**

இறந்தவரை நினைத்து வருடக் கணக்கில் அழுது புலம்பிக் கொண்டிருந்தபோதிலும் அவர் ஒருபோதும் திரும்பிவரப் போவதில்லை நாமும் ஒருநாள் அவ்வாறே போக வேண்டியதுதானே! என்று எண்ணி, இருக்கும் வரையில் தர்மங்கள் செய்து, நன்றாகச் சாப்பிட்டு சுகமாக இருப்பீர்களாக!

**ஒருநாள் உணவை ஒழி என்றால் ஒழியாய்**
**இரு நாளுக்கு ஏல் என்றால் ஏலாய் - ஒரு நாளும்**
**என் நோவு அறியாய் இடும்பைகூர் என் வயிறே!**
**உன்னோடு வாழ்தல் அரிது 11**

தினந்தோறும் உண்பதை ஒழிக்க இயலாது; இரண்டு நாட்களுக்கு சேர்ந்தாற் போல் உண்ணவும் முடியாது; என்னுடைய துன்பத்தை உணராத இந்த வயிற்றுடன் வாழ்வது மிகவும் சிரமம்.

**ஆற்றங் கரையின் மரமும் அரசு அறிய**
**வீற்றிருந்த வாழ்வும் விழும் அன்றே - ஏற்றம்**
**உழுதுஉண்டு வாழ்வதற்கு ஒப்பு இல்லை கண்டீர்**
**பழுது உண்டு வேறு ஓர் பணிக்கு 12**

ஆற்றங்கரையில் இருக்கும் மரமும், அரசு மரியாதையோடு வாழ்ந்த வாழ்வும்கூட, ஒருநாள் அழிந்து விடும்; ஆனால், வேளாண்மை செய்து வாழ்வதற்கு இருக்கும் சிறப்பு வேறு எந்தத் தொழிலுக்கும் இல்லை.

**ஆவாரை யாரே அழிப்பார்? அன்றிச்**
**சாவாரை யாரே தவிர்ப்பவர்? ஓவாமல்**
**ஐயம் புகுவாரை விலக்குவார்?**
**மெய் அம்புவி அதன் மேல் 13**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையோடு உலகில் வாழ்பவரை எவராலும் அழிக்க முடியாது; மரணம் அடையக்கூடியவரை தடுத்து நிறுத்தவும் இயலாது; தினந் தோறும் பிச்சை எடுத்து திரிவோரையும் நிறுத்த முடியாது.

**பிச்சைக்கு மூத்தகுடி வாழ்க்கை பேசுங்கால்**
**இச்சை பல சொல்லி இடித்து உண்கை - *சீச்சீ***
**வயிறு வளர்க்கைக்கு மானம் அழியாது**
**உயிர் விடுகை சால உறும் 14**

பிச்சை எடுத்து உண்பதைக் காட்டிலும் இழிவானது, பிறரிடம் ஆசை வார்த்தைகளைக் கூறி, அவமானத்துக்கு ஆளாகி வயிறு வளர்ப்ப தாகும்; அதைக் காட்டிலும் மானத்தோடு உயிரைத் துறப்பது உயர் வாகும்.

**சிவாய நம என்று சிந்தித்து இருப்போர்க்கு**
**அபாயம் ஒரு நாளும் இல்லை - உபாயம்**
**இதுவே; மதியாகும்; அல்லாத எல்லாம்**
**விதியே மதியாய் விடும் 15**

பஞ்சாட்சர மந்திரத்தை தினந்தோறும் தியானிப்பவர்களுக்கு ஒரு கெடுதலும் நேராது; இதுவே துன்பத்தை நீக்க வழி; மற்றவை யாவும் விதிப்படியே ஆகும்.

**தண்ணீர் நில நலத்தால் தக்கோர் குணம் கொடையால்**
**கண் நீர்மை மாறாக் கருணையால் - பெண்ணீர்மை**
**கற்பு அழியா ஆற்றால்! கடல் சூழ்ந்த வையகத்துள்**
**அற்புதமாம் என்றே அறி 16**

நிலத்தின் தன்மையால் தண்ணீரையும், ஈயும் தன்மையால் நல்லவர் களுடைய சுபாவத்தையும், கருணை மிகுந்த பார்வையால் கண்களின் பெருமையையும், கற்பு நெறியால் பெண்களின் நேர்மையையும் காணலாம். இவையே உலகில் வியக்கத்தக்கது என அறிவீர்களாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செய் தீவினை இருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்**
**எய்த வருமோ இரு நிதியம்? - வையத்து**
**அறும் பாவம் என்ன அறிந்து அன்று இடார்க்கு இன்று**
**வெறும் பானை பொங்குமோ மேல்! 17**

முற்பிறவியில் செய்த தீவினையால் துன்புறும்போது தெய்வத்தை நொந்து கொண்டால் செல்வம் யாவும் சேர்ந்து விடுமா? வாழ்ந்த காலத்தில் பாவத்தை நீக்க, வழங்காதவர்களுக்கு இப்பொழுது வெற்றுப்பானை பொங்கிவிடுமா?

**பெற்றார் பிறந்தார் பெரு நாட்டார் பேருலகில்**
**உற்றார் உகந்தார் என வேண்டார் - மற்றோர்**
**இரணங் கொடுத்தால் இடுவர்; இடாரே**
**சரணம் கொடுத்தாலும் தாம் 18**

பெற்றோர், கூடப்பிறந்தவர், ஊர்க்காரர், உறவினர், பிரியமானவர், வேண்டாத உலோபிகள், தங்களைத் துன்புறுத்தியவர்களுக்கே கொடுப்பார்கள்; மற்றப்படி அவர்கள் காலில் வீழ்ந்து பணிந்தாலும் கொடுக்க மாட்டார்கள்.

**சேவித்தும் சென்று இரந்தும் தெண் நீர்க்கடல் கடந்தும்**
**பாவித்தும் பாராண்டும் பாட்டு இசைத்தும் போவிப்பம்**
**பாழின் உடம்பை வயிற்றின் கொடுமையால்**
**நாழி அரிசிக்கே நாம் 19**

பசியின் கொடுமை தாளாமல், பிறரை வணங்கியும் யாசித்தும், கடல் கடந்து சென்றும், அறிவற்றவரை பெரிய மனிதராகக் கருதியும் புகழ்ந்து பாடியும் ஒரு படி அரிசிக்காக இந்த உடலைப் போக்குகிறோம்.

**அம்மி துணையாக ஆறு இழிந்தவாறு ஒக்கும்**
**கொம்மை முலை பகர்வார் கொண்டாட்டம் - இம்மை**
**மறுமைக்கும் நன்று அன்று மாநிதியம் போக்கி**
**வறுமைக்கு வித்தாய் விடும் 20**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மிக்கல்லை துணையாகக் கட்டிக்கொண்டு ஆற்று வெள்ளத்தில் இறங்குவது போல், விலைமகளை விரும்பி, ஆசைப்பட்டுப் பெரும் செல்வத்தை அழித்து இன்புறுவது வறுமைக்கு ஆளாகி இப்பிறப்பிலும் அடுத்த பிறப்பிலும் துன்புற நேரிடும்.

**நீரும் நிழலும் நிலம் பொதியும் நெல் கட்டும்**
**பேரும் புகழும் பெரு வாழ்வும் - ஊரும்**
**வருந்திருவும் வாழ்நாளும் வஞ்சகமில்லார்க்கு என்றும்**
**தரும் சிவந்த தாமரையாள் தான் 21**

வஞ்சனை இல்லாதவருக்கு நீர், வீடு, நெல், பெயர், புகழ் சிறப்பான வாழ்வு, கிராமம், வளரும் செல்வம், நீடித்த ஆயுள் ஆகியன திருமகளின் திருவருளால் எந்நாளும் கிடைக்கும்.

**பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்துக் கேடுகெட்ட**
**மானிடரே கேளுங்கள்; கூடு விட்டு இங்கு**
**ஆவிதான் போயின் பின்பு யாரோ அனுபவிப்பார்**
**பாவிகாள் அந்தப் பணம் 22**

வருந்தி உழைத்துத் தேடிய செல்வத்தைக் கொண்டு தானும் சுகப்படாமல், பிறருக்கும் வழங்காமல் பூமியில் புதைத்து வைத்து, அலையும் கேடு கெட்ட மனிதர்களே, உங்களுடைய உயிர் போன பிறகு, அந்தப் பணத்தை யார் அனுபவிப்பார்?

**வேதாளம் சேருமே வெள் எருக்குப் பூக்குமே**
**பாதாள மூலி படருமே - மூதேவி**
**சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே**
**மன்று ஓரம் சொன்னார் மனை 23**

நீதி மன்றத்தில் ஒரு சார்பாக (நடுநிலமை இல்லாமல) நீதி வழங்குபவர் வீட்டிலே பேய்கள், மூதேவி, பாம்புகள் முதலியன குடி இருப்பதோடு வெள்எருக்கம் பூவும் பாதாள மூலிக்கொடியும் படர்ந்து பாழ் அடைந்து போகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நீறு இல்லா நெற்றி பாழ்; நெய் இல்லா உண்டிபாழ்**
**ஆறு இல்லா ஊருக்கு அழகு பாழ் - மாறுஇல்**
**உடன் பிறப்பு இல்லா உடம்பு பாழ்; பாழே**
**மடக்கொடி இல்லா மனை.** **24**

திருநீறு அணியாத நெற்றி, நெய் இல்லாத உணவு, நதி இல்லாத ஊர், கூடப் பிறவாத பிறப்பு, மனைவி இல்லாத வீடு இவை யாவும் சிறப்புடையன அல்ல.

**ஆன முதலில் அதிகம் செலவு ஆனால்**
**மானம் அழிந்து மதி கெட்டுப் போன திசை**
**எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ் பிறப்பும் தீயனாய்**
**நல்லார்க்கும் பொல்லானாம் நாடு** **25**

முதலுக்கு மேல் செலவு செய்பவன் மானம் கெட்டு அறிவு இழந்து திருடனாகி, ஏழு பிறப்பிலும் தீயவனாகி நல்லவர்களுக்கும் பொல்லாதவன் ஆவான் என்பதை அறிவாயாக!

**மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை**
**தானம் தவம் உயர்ச்சி தாளாண்மை - தேனின்**
**கசி வந்த சொல்லியர் மேல் காமுறுதல் பத்தும்**
**பசி வந்திடப் பறந்து போம்** **26**

பெருமை, குடும்பப் பெருமை, படிப்பு, அழகு, உண்மை உயர்வு, ஈகை, நோன்பு, உயர்வு, தொழில் முயற்சி, மங்கையிடம் ஆசை ஆகிய பத்தும் பசி வந்து விட்டால் பறந்து ஓடிவிடும்.

**ஒன்றை நினைக்கின் அது ஒழிந்துவிட்டு ஒன்றாகும்**
**அன்றி அதுவரினும் வந்து எய்தும் - ஒன்றை**
**நினையாத முன் வந்து நிற்பினும் நிற்கும்**
**எனை ஆளும் ஈசன் செயல்** **27**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றை நினைத்தால் அதற்குப் பதிலாக வேறு ஒன்று கிடைக்கும்; அல்லது அதுவே கிடைத்தாலும் கிடைக்கக் கூடும்; எண்ணாதது ஒன்று எதிரே வந்து நின்றாலும் நிற்கும்; எல்லாம் இறைவனுடைய திருவருளே ஆகும்.

**உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்**
**எண்பது கோடி நினைந்து என்னுவன - கண் புதைந்த**
**மாந்தர் குடி வாழ்க்கை மண்ணின் கலம் போலச்**
**சாந்துணையும் சஞ்சலமே தான்** **28**

சாப்பிடுவது ஒருபடி சோறு; உடுத்திக் கொள்வது நான்கு முழ வேஷ்டி; ஆனால் எண்பது கோடி காரியங்களை நினைத்துக் கொண்டிருக்கும் கண்மூடித்தனமான இந்த மனித வாழ்வானது உயிர் உள்ளவரை துன்பமாகத்தான் இருக்கும்.

**மரம் பழுத்தால் வெளவாலை வாவென்று கூவி**
**இரந்து அழைப்பார் யாவரும் அங்கில்லை - சுரந்து அமுதம்**
**கற்றா தரல் போல் கரவாது அளிப்பரேல்**
**உற்றார் உலகத் தவர்** **29**

மரத்தில் பழம் பழுத்திருக்கும் பொழுது வெளவாலை யாரும் கூவி அழைப்பது இல்லை. பசு கன்றுக்குப் பால் சுரந்து கொடுப்பது போல், தாராளமாக அள்ளிக் கொடுத்தால் உலகத்தில் எல்லோரும் உறவினரைப் போல் வந்து கூடுவார்கள்.

**தாம் தாம் முன் செய்த வினை தாமே அனுபவிப்பார்**
**பூந்தாமரை யோன் பொறி வழியே - வேந்தே**
**ஒறுத்தாரை என் செயலாம் ஊரெல்லாம் ஒன்றா**
**வெறுத்தாலும் போமோ விதி** **30**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்பிறவியிலே அவரவர் செய்த நல்வினை தீவினைகளை பிரமன் விதித்தபடியே அனுபவிப்பார்கள்; தீவினை செய்தவர்களை நாம் என்ன செய்ய இயலும்? ஊர் முழுதும் ஒன்று திரண்டு வெறுத்தாலும் விதி விட்டுப் போகுமா?

**இழுக்கு உடைய பாட்டிற்கு இசை நன்று; சாலும்**
**ஒழுக்கம் உயர் குலத்தின் நன்று - வழுக்குடைய**
**வீரத்தின் நன்று விடாநோய்; பழிக்கு அஞ்சாத்**
**தாரத்தின் நன்று தனி** **31**

குற்றம் உடைய பாட்டும் ஒழுக்கம் இல்லாத உயர் குடும்பமும் தவறான வீரமும் பிறர் பழிக்கு ஆளான மனைவியுடன் வாழ்வதும் துன்பத்தைத் தரும்.

**ஆறிடும் மேடும் மடுவும் போலாம் செல்வம்**
**மாறிடும் ஏறிடும் மாநிலத்தீர் - சோறு இடும்**
**தண்ணீரும் வாரும்; தருமமே சார்பாக**
**உண்ணீர்மை வீறும் உயர்ந்து** **32**

செல்வமானது ஆற்று வெள்ளத்தின் மேடு பள்ளம் போன்றது; ஆகையால் செல்வம் இருக்கும் பொழுதே யாசிப்பவருக்கு உணவும் நீரும் வழங்குங்கள்; அந்தத் தர்மத்தின் பயனாக உள்ளத்திலே தூய்மை பொலிவுறும்.

**வெட்டனவை மெத்தனவை வெல்லாவாம் வேழத்தில்**
**பட்டு உருவும் கோல் பஞ்சில் பாயாது நெட்டிருப்புப்**
**பாரைக்கு நெக்கு விடாப்பாறை பசுமரத்தின்**
**வேருக்கு நெக்கு விடும்** **33**

யானை மேலே பாயும் அம்பானது பஞ்சுப் பொதியில் பாயாது; கடப் பாரைக்குப் பிளக்காத கற்பாறையானது பச்சை மரத்தின் வேருக்குப் பிளந்து கொடுக்கும்; கடுமையான சொல்லானது இனிமையான சொல்லை வெற்றி கொள்ளாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்லானே ஆனாலும் கைப்பொருள் ஒன்று உண்டாயின்**
**எல்லோரும் சென்று அங்கு எதிர்கொள்வர் -இல்லானை**
**இல்லாளும் வேண்டாள் மற்றுஈன்ற எடுத்த தாய் வேண்டாள்;**
**செல்லாது அவன் வாயிற் சொல் 34**

படியாதவன் என்றாலும் அவனிடம் பணம் இருந்தால் எல்லோரும் அவனை மதிப்பார்கள்; பணம் இல்லாதவனை அவன் மனைவியும், பெற்ற தாயும்கூட விரும்பமாட்டார்கள்; அவன் பேச்சுக்கு மதிப்பு இருக்காது.

**பூவாதே காய்க்கும் மரமும் உளமக்கள் உளும்**
**ஏவாதே நின்று உணர்வார் தாம் உளரே - தூவா**
**விரைத்தாலும் நன்று ஆகா வித்தெனவே பேதைக்கு**
**உரைத்தாலும் தோன்றாது உணர்வு 35**

பூக்காமல் காய்க்கின்ற மரங்கள் இருப்பதைப்போல, மனிதர்களிடையேயும் குறிப்பு அறிந்து செயலாற்றக்கூடியவர்களும் இருக்கின்றனர். நன்றாக விதைத்த போதிலும் முளைக்காத விதையைப் போல, என்ன சொன்னாலும் உணர இயலாத மூடர்களும் இருக்கின்றனர்.

**நண்டு சிப்பிவேய் கதலி நாசமுறும் காலத்தில்**
**கொண்ட கரு அளிக்கும் கொள்கைபோல் - ஒண்தொடி**
**போதம் தனம் கல்வி போன்ற வரும் காலம் அயல்**
**மாதர் மேல் வைப்பார் மனம் 36**

நண்டு, முத்துச்சிப்பி, வாழை, மூங்கில் ஆகியவற்றில் கருவே அவற்றை அழித்துவிடும். ஒருவருடைய ஞானம், செல்வம், வித்தை அழியும் காலத்தில் பிற பெண்களை நாடிச் செல்வர்.

**வினைப் பயனை வெல்வதற்கு வேதம் முதலாம்**
**அனைத்தாய நூலகத்தும் இல்லை - நினைப்பது எனக்**
**கண்ணுறுவது**
**அல்லால் கவலைப்படேல் நெஞ்சேமெய்**
**விண் உறுவார்க்கு இல்லை விதி 37**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறவியால் உண்டாகும் வினைப்பயனை வெற்றி காண்பதற்கு வேதம் முதலான நூல்களில் ஆதாரம் இல்லை. முக்தி நெறியாகிய தியான சமாதிகளில் ஆழ்ந்திருப்போருக்கு நினைப்பது போல தோன்றும் விதி அவர்களை துன்புறுத்தாது.

**நன்று என்றும் தீது என்றும் நான் என்றும் தான் என்றும்**
**அன்று என்றும் ஆம் என்றும் ஆகாதே - நின்ற நிலை**
**தானதாம் தத்துவமாம் சம்பறுத்தார் யாக்கைக்குப்**
**போனவா தேடும் பொருள் 38**

நல்லது, தீயது, நான் அவன், இல்லை, ஆம் ஆகிய பேதங்களைக் கடப்பதேதான் அது வாழும் உண்மைப் பொருள் ஆகும். புல்லை அறுத்தவர் அதை கட்டுவதற்குக் கயிறைத் தேடிச் சென்றதைப் போல இறைவன் எங்கோ இருப்பதாக எண்ணி அலைவது வீணாகும்.

**முப்பதாம் ஆண்டு அளவில் மூன்றற்று ஒரு பொருளை**
**தப்பாமல் தன்னுள் பெறான் ஆயின் - செய்யும்**
**கலை அளவே ஆகுமாம் காரிகையார் தங்கள்**
**முலை அளவே ஆகுமாம் மூப்பு 39**

முப்பது வயது அளவில் காமம், வெகுளி, மயக்கம் ஆகிய மூன்றையும் ஒழித்து, மெய்ப் பொருளான இறைவனை அடையும் வழியை அறியாதவன் கிளிப் பிள்ளையைப் போல கற்றதையே உருப்போட்டு ஒப்புவிப்பவன் போன்றவன் ஆவான்.

**தேவர் குறளும் திருநாள் மறை முடிவும்**
**மூவர் தமிழும் முனி மொழியும் - கோவை**
**திருவாசகமும் திருமூலர் சொல்லும்**
**ஒரு வாசகம் என்று உணர் 40**

திருக்குறள், தேவாரம், திருக்கோவையார், திருவாசகம், நான்கு வேதங்களின் உபநிடதங்கள், திருமந்திரம் ஆகிய அனைத்தும் ஒரு பொருளையே உணர்த்துகின்றன என்பதை அறிந்து கொள்வாயாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி ஒழுக்கம்

## மூலமும் உரையும்

**அஞ்சு வயதி லாதியை யோது** 1

கடவுளை ஐந்தாமாண்டில் ஓதுதல் செய்.

**ஆதியை ஓத அறிவுண் டாமே.** 2

கடவுளை ஓதுதல் செய்ய அறிவு தோன்றும்.

**இனியது கொடுத்து எழுத்தைத் தானறி** 3

இனிய பொருள் முதலியவற்றை (ஆசானுக்குக்) கொடுத்து வித்தைகளை நீ கற்றுக் கொள்.

**ஈட்டிய நற்பொரு ளெழுத்தே யாகும்.** 4

ஒருவன் சம்பாதித்த நல்லபொருளாவது கல்விப் பொருளாகும்.

**உடைமை யென்பது கல்வி யுடைமை** 5

ஒருவனுக்குப் பொருள் என்று சொல்லப்படுவது கல்விப் பொருளேயாம்.

**ஊமை யென்பவ ரோதா தவரே** 6

ஊமையென்று சொல்லப்படுபவர் நல்ல நூல்களை வாசியாதவர்.

**எழுதப் படுவ தெழுத்தே யாகும்** 7

எழுதுதல் செய்யப்படுவது அட்சரங்களேயாகும்.

**ஏழை யென்பவ ரெழுத்தறி யாதவர்** 8

அறிவிலாரென்பர் கல்வி கல்லாதவர்.

**ஐய மேற்கினு மறிவ தெழுத்தே.** 9

பிச்சையெடுத்தாலும் தெரியப்படுவது எழுத்தாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒருபொழு தாயினு மோதி நன்கறி** 10

ஒரு காலம் ஆனாலும் நீ அறிவு நூல்களை வாசித்து நன்றாயறிந்து கொள்.

***ஓத லுடைமை வேத வித்தை*** 11

இறைவனாலருளிச் செய்யப்பட்ட வேதம் முதலாகிய வித்தைகளே, ஓதுதற்கரியனவாம்.

**ஔவியம் பேசா ராமெழுத் தறிந்தோர்** 12

பொறாமைச் சொற்களை, எழுத்து அறிந்தோர் பேசார்.

**கண்ணுடை யவர்கள் கற்றவர் தாமே.** 13

கண்பொருந்தியவர்கள் அறிவு நூல்களை வாசித்தவர் ஆகும்.

**காவல ரெனினும் கணக்கை யோர்ந்தறி** 14

அரசர்களானாலும் எண்ணையும் எழுத்தையும் கற்றறி.

**கிடையா வுடைமை கல்வி யுடைமை** 15

கிடைத்தற்கரிய பொருள் கல்விப் பொருளேயாகும்.

**கீர்த்தியும் பெருமையும் கிடைப்பது கல்வி** 16

புகழையும் மேன்மையையும் அடையச் செய்வது கல்விப் பொருளே யாகும்.

**குறைவறக் கற்றவன் கோடியி லொருவன்** 17

நன்றாகக் கற்றவன் கோடிபேருள் ஒருவனாகும்.

**கூர்மை யென்பது குன்றாக் கல்வி** 18

அறிவு என்று சொல்லப்படுவது குறையாத கல்வியுடைமையேயாம்.

**கெடுப்பினுங் கல்வி கேடு படாது.** 19

பிறராற் கெடுக்கப்படினும் கல்விப்பொருள் அழியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கேண்மை யுடைமை தாழ்விலாக் கல்வி** 20

ஒருவனுக்குச் சிநேகமுடைமை குறையாத கல்விப்பொருளையுடை யனாயிருத்தலாம்.

**கைப்பொரு ளென்பது கசடறு கல்வி** 21

கையிலுள்ள பொருளென்று சொல்லப்படுவது குற்றந்தீரக் கற்றலா கும்.

**கொற்றவன் றன்னிலும் கற்றவ னுயர்ந்தவன்** 22

அரசனிலும் கற்றவன் உயர்ந்தவன்.

**கோதறு கல்வி குவலயந் தருமே** 23

குற்றந்தீரக் கற்ற கல்வியானது பூமியைத் தரும்.

**சகல கலைக்கும் தலைமை யெழுத்தே** 24

சகல கலைகளுக்கும் முதன்மை அட்சரம்.

**சாத்திரங் கற்றவன் றன்னை யறிந்தவன்** 25

வேதமுதலாகிய பதிநூல்களைக் கற்றவன் தன்னைத் தெரிந்தவனா கும்.

**சிறுமையிற் கல்வி சிலையி லெழுத்தே** 26

சிறு வயதில் கல்வியுடையனாதல் கல்லில் எழுதிய எழுத்துப் போலாகும்.

**சீரிய தமிழைத் தெளிய வோது** 27

நல்ல தமிழை நன்றாக நீ கற்றறி.

**சுற்ற மென்பது துகளறு கல்வி.** 28

இனமென்று சொல்லப்படுவது குற்றந்தீர்ந்த கல்வியுடையனாதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சூக்கமுந் தூலமுந் தோன்றக் கற்றறி** 29

ஞானமும், கிரியையும் தெரிய நீ கற்றறி.

**சென்றிட மெல்லாம் சிறப்பே கல்வி** 30

போமிடமெல்லாம் சிறப்பைத் தருவது கல்வி.

***சேயன் என்பவன் தீங்கறக் கற்றவன்*** 31

சேயன் என்று சொல்லப்படுபவன் குற்றந்தீரக் கற்றவன்.

**சைகையுஞ் சமர்த்துந் தந்திடுங் கல்வி** 32

பழக்கத்தையும், திறமையையும் கல்விப் பொருள் (ஒருவனுக்குக்) கொடுக்கும்.

**சொல்லும் பொருளும் தோன்றக் கற்றறி** 33

சொல்லையும் பொருளையும் தெரிய நீ படித்தறி.

**சோம்ப ரென்பவர் சொல்லெழுத் தறியார்** 34

சோம்பலுடையவரென்பவர் சொல்லப்பட்ட எழுத்தை அறியாதவர்.

**தகுமெழுத் தறிந்தவன் தலைவ னாவன்** 35

தகுதியாகிய எழுத்தை தெரிந்தவன் குருவாகுவான்.

**தான்கற் றவற்றைச் சபைதனி லோது** 36

தான் கற்ற நூற் பொருள்களை கற்றோரிருக்கும் சபையின் கண்ணே நீ ஓதுதல் செய்.

**திருந்த வோதத் திறமுண் டாமே** 37

நன்றாக படிக்க சாமர்த்தியமுண்டாம்.

**தீரக் கற்றவன் தேசிக னாவன்** 38

நன்றாகக் கற்றவன் குரு ஆகுவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**துறவோ ரென்பவர் துரிசறக் கற்றோர்** 39

துறவோர் என்று சொல்லப்படுபவர் குற்றந் தீரக் கற்றவர்.

**தூர்த்த ரென்பவர் சொல்லெழுத் தறியார்** 40

துட்டர் என்பவர் சொல்லையுமெழுத்தையும் அறியாதவர்.

**தெளிய வோதத் திறமுண் டாமே.** 41

நன்றாகக் கற்க சாமர்த்தியம் உண்டாம்.

**தேசமும் நாடும் திருந்த வோது** 42

தேசங்களையும் நாட்டையும் திருந்தும்படி நீ கல்.

**தைக்கக் கற்றவன் சமர்த்த னாவன்** 43

மனம் அழுந்த படித்தவன் கெட்டிக்காரனாவான்.

**தொன்னூல் முழுந் தோன்றக் கற்றறி** 44

பழைய நூல் முழுவதையும் தெரிய நீ கற்றறிந்து கொள்.

**தோழ னாவது சோர்விலாக் கல்வி** 45

சிநேகனாவது சோர்ச்சியற்ற கல்வியேயாம்.

**நற்பொருள் கொடுத்து நன்றா யோது** 46

நல்ல பொருளைக் கொடுத்து நன்றாக நீ ஓதுதல் செய்.

**நானில முழுதும் நயந்தருங் கல்வி** 47

நான்கு வகையான பூமி முழுவதிலும் நயத்தைத் தருவது கல்வியே யாகும்.

**நீசரித் தாயினுங் கற்பது நிலையே** 48

நீ பற்பல விடயங்கட்குச் சென்றாயினும் கற்றுக் கொள்வது நிலையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நுண்பொருள் கொடுத்து நூல்பல தையுமறி** 49

நுண்ணிய பொருள்களை (ஆசிரியனுக்குக்) கொடுத்து நீ பல நூல்களையும் கற்றுக் கொள்.

**நூறாண் டாயினுங் கல்வியை நோக்கு** 50

நூறு வயதானாலும் நீ கல்வியை விரும்பு

**நெடுங்கட லோடினும் நிலையே கல்வி** 51

கரையயடுத்த கடலில் ஓடிப்போனாலும் கல்வி நிலையேயாகும்.

**நேராக் கல்வி நிலையா காதே** 52

உண்மையாகக் கற்காத கல்வி நிலையாகமாட்டாது.

**நைய வருகினும் நொய்ய நன்கறி** 53

மெலியவருகினும் நீ இலேசாக நல்லாய்க் கற்றுக் கொள்.

**நொந்தறி யாதவர் செந்தமிழ் கற்றோர்** 54

வருந்தி அறியாதவர் இயற்றமிழைக் கற்றவர்கள்.

**நோகா துண்பவர் நுண்பொருள் அறிந்தோர்.** 55

நுட்பமான கருத்தை அறிந்தவர் வருத்தமுறாது சீவிப்பவராவர்.

**பலகலை கற்றவர் பகையைக் கைவிடு** 56

பல நூல்களைக் கற்றவர்களுடைய விரோதத்தைக் கைவிடு.

**பாவலர் என்பவர் பழுதறக் கற்றோர்** 57

பாக்களில் வல்லவர் என்று சொல்லப்படுபவர் குற்றந்தீரக் கற்றவர் ஆவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிழையறக் கற்றவர் பெரியவர் தாமே** 58

குற்றந் தீரக் கற்றவர் பெரியவராகும்.

**பீடுஞ் செல்வமும் பெறத்தருங் கல்வி** 59

பெருமையும் பாக்கியமும் பெற்றுத் தரும் கல்வி.

**புரையறக் கற்றவர் புவியாள் பவரே** 60

பூமியைப் பரிபாலனஞ் செய்வோர் குற்றந்தீரக் கற்றவராவர்.

**பூமியிற் செல்வம் புகழ் பெறுங் கல்வி** 61

நிலவுலகிலுள்ள செல்வமாவது கீர்த்தியைத் தரும் கல்வியேயாம்.

**பெருமை பெறுவது பேசருங் கல்வி** 62

மேன்மையைத் தருவது சொல்லுதற்கரிய கல்வியேயாம்.

**பேதை யென்பவர் பெருநூ லறியார்** 63

அறிவிலா ரென்பவர் பெரிய நூல்களை அறியாதவர் ஆவர்.

**பையப் பையப் படித்தே யொழுகு** 64

மெல்ல மெல்ல நீ கற்று நட.

**பொருள்மிகக் கொடுத்து போதக் கற்றறி** 65

ஆசானுக்கு பொருளை மிகுதியாகக் கொடுத்து நிரம்ப நீ கற்றறிந்து கொள்.

**போதக் கற்றவன் புண்ணியஞ் செய்தவன்** 66

நிரம்பக் கல்வி கற்கின்றவன் புண்ணியஞ் செய்தவன்.

**மன்ன ராயினு மறைகளை யோது** 67

அரசர்களாயினும் வேதங்களையோதுதல் செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாசறக் கற்றவர் மாநில மாள்வார்** 68

குற்றந் தீரக் கற்றவர் பெரியபூமியை ஆள்வார்.

**மிகப் பெருஞ் செல்வம் விளைத்திடுங் கல்வி** 69

கல்வியானது மிகப்பெரியதாகிய செல்வத்தை உண்டாக்கும்.

**மீசுரக் கொடுத்து வித்தையைக் கற்றறி** 70

வித்தைகளை அதிகமாகப் பொருளை (ஆசிரியனுக்குக்) கொடுத்து நீ படித்தறி.

**முத்தமிழ் தனக்கு மூப்பு இல்லை** 71

இயலிசை நாடகமென்னும் தமிழைக் கற்றற்கு முதுமையென்பது இல்லை.

**மூதறி வுயர்த்துந் தீதிலாக் கல்வி** 72

நற்கல்விகள் பேரறிவிற் றலையுறச் செய்யும்.

**மெல்லிய ரெனும் வேண்டுவ தெழுத்தே** 73

கல்வி பெண்களாயினும் விரும்புவதாகும்.

**மேலோர் என்ன வித்தையைக் கற்றறி** 74

பெரியோரென்று சொல்லும்படி நீ வித்தைகளைக் கற்றறிந்து கொள்.

**மையறு கல்வியார் மாநில மாள்வார்** 75

மயக்கம் நீங்கிய கல்வியையுடையார் பெரிய பூமியை ஆள்பவராவர்.

**மொழிவ தகர முதலெழுத் தாமே** 76

சொல்லப்படுவது அகரம் முதலாகிய எழுத்துக்களாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மோக விகாரர் முன்னூல் பாரார்** 77

மயக்கம் பொருந்திய வேறுபட்ட குணங்களையுடையோர் பழைய நூல்களைப் பார்க்கமாட்டார்.

**வஞ்சக மோதார் நெஞ்சுறக் கற்றோர்** 78

மனமமையக் கற்றறிந்தவர் கபட வார்த்தைகளைப் பேசமாட்டார்.

**வாட்டந் தராது மறவாக் கல்வி** 79

மாறாத கல்வியுடைமை சோர்வு தரமாட்டாது.

**வித்தைகல் லாதவர் வெறியர் ஆவர்** 80

கல்வியைக் கற்காதவர் பித்தராவர்.

**வீரியம் பேசார் வித்தை யறிந்தோர்** 81

வித்தைகளையறிந்தவர் வீரம் பேசமாட்டார்.

**வெண்பா முதலாய் விளங்க வோது** 82

வெண்பா ஆசிரியப்பா கலிப்பா வஞ்சிப்பா முதலாகிய பாவினங்களை நீ விளங்கும்படி ஓதுதல் செய்.

**வையகமெல்லாம் வாழ்த்தவே யோது** 83

பூமியிலுள்ளார் யாவரும் வாழ்த்துதல் செய்ய நீ ஓதுதல் செய்.


**வெளவிப் படிக்க வாழ்வுண் டாமே** 84

நூல்களை மனதில் ஊன்றிக் கற்க நித்தியானந்தப் பெருவாழ் வுண்டாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுடர்நிலவு கிறபிக்ஸ், இணுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org